UNIVERSITY ... LIBRARY
08 APR 2014


# எழுகதிர்

ஐரோப்பிய பதிப்பு

ELUKATHIR

Rs20 | Euro0.50

வாரஇதழ் | இதழ்: 78 | 04.03.2014


## இருமொழி அடையாள அட்டை: வழங்கும் பணி ஆரம்பம்!

தேசிய அடையாள அட்டைகளில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு தேசிய மொழிகளை உள்ளடக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் கடந்த வாரம் விநியோகிக்கப்பட்டன.

கொழும்பு ஜாவத்தையில் அமைந்துள்ள இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தில் இரு மொழிகளில் விபரங்கள் எழுதப்பட்ட அடையாள அட்டைகள் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன.

முதல் அடையாள அட்டை அந்தத் திணைக்களத்தில் கடந்த 15 வருடங்களாக பணியாற்றி வரும் பெண்ணொருவருக்கு வழங்கப்பட்டது.இந்த வைபவத்தில் இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத் குமார உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## உள்நாட்டுப் பொறிமுறை:

# இலங்கைக்கு உதவக்கோரி அமெரிக்க செனட்டில் பிரேரணை!

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் உண்டான துன்பகரமான நிகழ்வுகளை கையாள உள்நாட்டு பொறிமுறை ஒன்றை வகுத்துக்கொள்ள இலங்கைக்கு உதவ வேண்டும் என அமெரிக்காவையும், சர்வதேச சமூகத்தையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணை ஒன்றை பதினொரு அமெரிக்க செனட்டர்கள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த பிரேரணை இலங்கை தொடர்பாக ஒரு முழுமையான நன்கு சமனிலைப்பட்ட கொள்கையை உருவாக்கும்படி அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

இந்த கொள்கையானது அமெரிக்காவின் நலன்கள், சட்டத்தில் ஆட்சி என்பவற்றை பிரதிபலிக்க வேண்டுமெனவும் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

சமய மற்றும் ஊடக சுதந்திரங்களை முன்னெற்றவேண்டும் எனவும் ஊடகவியலாளர்கள், பத்திரிகை அலுவலகங்கள், வணக்க ஸ்தலங்கள் என்பவற்றின் மீதான தாக்குதல்களுக்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டுமெனவும் இந்த பிரேரணை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

## இணைந்து செயற்பட அமெரிக்கா விருப்பம்!



இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசா

(11ம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய மீனவர் 10ம் திகதி கொழும்பில் பேச்சு!!

இந்தியா மற்றும் இலங்கை மீனவப் பிரச்சினை தொடர்பான அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் நடைபெறவுள்ளதாக இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த பேச்சுவார்த்தை எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் பலர் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற சந்திப்பின் போது, அடுத்த

(11ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர்-ஜனாதிபதி மியன்மாரில் சந்திப்பு!


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் வாரம் மியன்மாரில் இந்த சந்திப்பு நடத்தப்பட உள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில் பிரதமர் மன்மோகன் சி;ங் பங்கேற்காமையைத் தொடர்ந்து, முதல் தடவையாக இரு நாட்டுத் தலைவர்களும்

(11ம் பக்கம் பார்க்க)

# இரணைமடு யாழ். குடிநீர் திட்டம்: ஐவர் குழுவை நியமித்தது கூட்டமைப்பு!



இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் கொண்டு செல்வதால் ஏற்படும் நெருக்கடி நிலை தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கென ஐந்து பேர் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை நியமிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் கொள்கையளவில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பங்கேற்ற முக்கிய கலந்துரையாடல் கடந்த வாரம் யாழ். பொது நூலக மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது.

இந்தக் கூட்டத்தில் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டு செல்வது தொடர்பில் தீவிரமாக விவாதிக்கப்பட்ட நிலையில் குறித்த திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு மேற்கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு கிளிநொச்சி மக்களுக்கு ஏற்படக்கூடிய நெருக்கடி நிலை குறித்து விளக்கமளித்து குறித்த திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பில் குறித்த குழு ஆராயும் என கொள்கையளவில் இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

ஐவர் கொண்ட குழுவிற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை தாங்குவார் என்றும் ஏனைய நால்வரும் பின்னர் தெரிவு

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதிய கட்டிடத் தொகுதி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரட்ணம் மகா வித்தியாலயத்தில் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் 8.5 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட 6 வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடத்



தொகுதி கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த கட்டிடத்தொகுதியினை யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் பிராந்திய அலுவலக திட்டமிடல் அதிகாரி திருமதி. விக்டோரியா தலிஸ்கனொவா திறந்து வைத்தார்.

அத்துடன், பாடசாலையின் தேவைக்கென 2 இலட்சம் ரூபா பெறுமதியான மின்பிறப்பாக்கியொன்றும் இந் நிகழ்வில் வைத்து பாடசாலை அதிபரிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வகுப்பறை கட்டிடம்

முல்லைத்தீவு புதுமாத்தளன் றோமன் கத்தோலிக்க அரசினர் பாடசாலையில் யு.என்.எச்.சி.ஆர்



நிறுவனத்தினால் 3.8 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடத் தொகுதி கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டிடத் தொகுதியினை யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் கிளிநொச்சி அலுவலகத்தின் தலைவர் மரின் டின் காஜ்டொம்கஜ் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.இந்நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பால் அபிவிருத்தி நிலையம்

ஜெர்மன் அரசாங்கமும் கார்கில்ஸ் நிறுவனமும் வடமாகாணத்தில் பசும் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் யாழ். மீசாலையில் பால் அபிவிருத்தி நிலையம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.



இலங்கைக்கான ஜெர்மன் தூதுவர் ஜர்ஜன் மொர்ஹட் இந்த நிலையத்தை திறந்து வைத்தார்.

இதனால், மீசாலையிலுள்ள 400 பேர் பயனடையவுள்ளனர். பால் உற்பத்திக்கான பயிற்சிகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும். மேலும், பாலை சிறந்த விலையில் சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருமானத்தை 50 சதவீதத்திற்கு அதிகமாக அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தூதுவர் தெரிவித்தார்.

## கணனித் தொழிநுட்பம் அறிமுகம்

மன்னார் நகரசபையில் கணினி மயப்படுத்தப்பட்ட வருமானப்பகுதி நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் உள்ளூராட்சி, கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்றுறை, சமூக நலன் மற்றும் காணிகள் அமைச்சின்



வடமாகாணச் செயலாளர் சி.திருவாகரன், ஆசிய மன்றத்தின் பொருளாதார ஆளுகைத்திட்ட பணிப்பாளர் கலாநிதி கோபாலகுமார் தம்பி, உள்ளூராட்சி பெருளாதார ஆளுகைத்திட்ட பிரதிக் குழுத் தலைவர் ஏ.சுபாகரன், மன்னார் பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே.துரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வங்கிச்செயற்பாடுகள்

சமுர்த்தி அதிகாரசபையின் நிதியில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிளிநொச்சி நகரம், வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் தலா 02 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச செயலர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்தார்.

சமுர்த்தி வங்கிகளில் பொதுமக்களுக்கான சேவைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 42 கிராம அலுவலகர் பிரிவுகள் உள்ளன அடிப்படையிலும் நிலப்பரப்பின் விஸ்தீரணத்தின் அடிப்படையில் 03 சமுர்த்தி வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சமுர்த்தி திட்டம் 2012ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு முழு வீச்சுடன் செயற்படுத்தப்படுகின்றது.

## குளம் புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிராட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள மூப்பன்குளம் 25 மில்லியன் ரூபா செலவில் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மஹாலிங்கம் தயாநந்தன் தெரிவித்தார்.

மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமலுள்ளதால் இங்குள்ள விவசாயக் குடும்பங்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

இக்குள புனரமைப்பு தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் ஊடாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீனிடம் மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் கூறினர்.

இது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கவனத்திற்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கொண்டுவந்த நிலையில், இக்குள புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## சுயதொழில் கடனுதவி

புனர்வாழ்வு பெற்ற கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் கடன் உதவிக்கான திறன் விருத்திச் செயலமர்வு கடந்த வாரம் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற செயலமர்வில் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச



செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 200 பேர் கலந்து கொண்டனர்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சரவணபவன் மோகனபவன் தலைமையில் நடைபெறுகின்ற செயலமர்வில், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அதிகாரிகள் வளவாளர்களாகக் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

இதன்போது, எவ்வாறு சுயதொழில் கடன்கள் மூலம் திறன்களை அபிவிருத்தி செய்வது என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

## செயலமர்வு

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் திவிநெகும திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பவர்களுக்கான செயலமர்வொன்று கடந்த வாரம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 18 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் இருந்தும் திவிநெகும திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புக்காக தெரிவு செய்யப்பட்ட 100 பயணாளிகள் இந்த செயலமர்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது கோழி வளர்க்கும் முறை, அதனால் ஏற்படும் வாழ்வாதார மேம்பாடு குறித்து விளக்கி கூறப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளதாக காத்தான்குடி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.கருணாகரண் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே. கருணாகரன், முகாமைத்துவ உதவியாளர் ஏ.லிங் கேஸ்பரன், கால்நடை உத்தியோகத்தர் வி.கோவேந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.முஸப்பர் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# அரசியலாகிப் போன இரணைமடுக்குளம்!

இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீரை வழங்கும் திட்டம் இன்று அரசியல் மயப்பட்டு தடுமாறி வருகின்றது.

அரசியல் மயப்பட்டுவிட்டது என்று எழுதியதுமே வாசகர்களுக்குப் புரிந்திருக்கும், இது தீர்வு வரக்கூடிய பிரசனையா என்பது.

இரணைமடுக்குளம் கிளிநொச்சி விவசாயிகளுக்கு அவர்களின் உயிர் நாடி போன்றது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. ஆனால் இந்த குளத்து நீரைப் பயன்படுத்தி சிறுபோக பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்கள் யார்? அவர்கள் ஒவ்வொருவரும் எத்தனை ஏக்கர்கள் நிலங்களை கிளிநொச்சியில் வாரிச்சுருட்டி வைத்திருக்கிறார்கள் என்று அவர்களின் பூராயங்களை நாம் ஆராய வெளிக்கிட்டால் அவர்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வந்து கிளிநொச்சியில் குடியேறியிருப்பவர்கள் தான் என்பது தெரியவரும். அவர்களில் பலர் தமது சொந்த இடங்களை விட்டு கிளிநொச்சிக்கு இடம்பெயரக் காரணமானதும் இந்த குடிநீர் பிரச்னைதான் என்பதும் கவனிக்கத்தக்கது. உதாரணமாக நெடுந்தீவு போன்ற தீவுப் பகுதியில் போதிய அளவு விவசாய நிலங்கள் இருந்தபோதிலும், அங்கு குடிநீருக்குக் கூட தண்ணீர் கிடைக்காத காரணத்தால் அங்கிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் குடியேறியவர்கள் பலர். இன்று இரணைமடுக் குளத்து தண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுபோவதற்கு பலத்த எதிர்ப்பை வெளியிட்டுவரும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூட தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் குடியேறியவர் தான்.

எந்தத் தண்ணீருக்காக சொந்த இடங்களிலிருந்து கிளிநொச்சிக்கு வந்தோமோ அந்தத் தண்ணீருக்கே இப்போது ஆபத்து என்றால் அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள் தான். ஆனால் அதற்காக இரணைமடுக்குளத்தை பலகோடி ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யக் கிடைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் தவறவிடலாமா என்று இந்தத் திட்டத்திற்கு ஆதரவானவர்கள் எழுப்பும் கேள்வியும் நியாயமானதுதான்.

இரணைமடுக்குளம் பல வருடங்களாக புனர்நிர்மாணம்செய்யப்படாமல் இதன் அணைக்கட்டுகள் சேதமடைந்து வருகின்றன. இதேநிலை நீடித்தால் அதன் ஆயுட்காலமே கேள்விக்குரியதாகிவிடும். இப்போது அதனைப் புனரமைத்து, அதன் அணைக்கட்டு உயரத்தை மேலும் உயர்த்தி அந்த நீரை யாழ்ப்பாணத்தின் குடிநீர் தேவைக்குப் பயன்படுத்தும் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இரண்டாயிரம் கோடி ரூபாவை கடனாக வழங்க முன் வந்திருக்கின்றது. குடிநீரை யாழ் குடாநாட்டு மக்களுக்கு விநியோகிப்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் தனது கடனை இருபது வருடங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி மீளப்பெறப்போகின்றது. இதற்காக குடிநீர் விநியோக சபை, மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் போன்றவற்றுடன் ஒப்பந்தம் செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்திருக்கின்றது. ஆக, வங்கியைப் பொறுத்தவரையில் இதுஒரு முதலீடு.

விவசாயிகளின் கவலை எல்லாம், மழை பெய்தால் மட்டுமே அந்தக் குளத்தினால் விவசாயிகள் பயனடைய முடிகின்றபோது, மழை இல்லாத காலங்களில் விவசாயத்திற்கே நீர் இல்லாமல் இருக்கையில் குடிநீரை எங்கிருந்து கொண்டுபோவீர்கள் என்பதே. நியாயமான கேள்விதான்.

ஆனால், வர்த்தக ரீதியில் பார்த்தால், ஒரு முதலாளி ஒரு முதலீட்டை செய்தால், அது தோல்வியில் முடிந்தால் இன்னும் முதலிட்டு போட்டதையும் எடுக்கத்தான் பார்ப்பாரே தவிர, போட்ட முதல் நஷ்டமடைய விடப்போவதில்லை. இரணைமடுக் குளத்திற்கு மழை நீர் இல்லாது இந்த குடிநீர் திட்டம் தோல்வியில் முடிந்தால், மேலும் முதலிட்டு குளத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்காக அவர் மேலும் முதலிட முன்வருவாரே தவிர அதனை அப்படியே கைவிடப் போவதில்லை. எனவே கிடைக்கின்ற முதலீட்டை பயன்படுத்தி இரணைமடுக் குளத்தை புனர்நிர்மாணம்செய்வதே புத்திசாலித்தனமானது. இதனைவைத்து அரசியல் செய்வதை சம்பந்தப்பட்ட வர்கள் தவிர்க்கவேண்டும்.

# சட்டத்தின் மூலம் பெற்றதை பறித்தெடுக்க முயற்சியாம்!

## முதலமைச்சர் விக்கி கவலை!!

சட்டத்தின்மூலம் பெற்றதை பறித்தெடுக்க முயல்வது வேதனையைத் தருகின்றது என்று வட மாகாண முதலமைச்சர் சீ.வீ. விக்னேஷ்வரன் தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நெட்டான் கண்டல் கிராமத்தில் சந்தைக் கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்களாக நினைத்து எது சரியோ எது முறையோ அதை செய்வது தான் ஜனநாயகம். எமது மக்களின் ஆசைகளையும் அபிலாஷைகளையும் நாம் பூர்த்திசெய்ய முன்வர வேண்டும். மக்களை அடக்கியாள முற்பட்டால் அங்கு எதேச்சாதிகாரமே உருவெடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மத்திய அரசாங்கம் இருக்கும் அதேநேரம், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்திருக்கின்றது சட்டம். அவ்வாறு பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ள பிரமாணம் எமக்குப் போதுமானதாக இல்லாதிருப்பினும், சட்டம் எமக்குத் தந்துள்ளதைக்கூட பறித்தெடுக்க அல்லது தராது பறிக்க அரசாங்கம் முயன்றுவருவது மனதுக்கு வேதனையாக இருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

நாம் எவ்வளவு பணங்கள் செலவுசெய்து தெருக்கள் அமைத்தோம், ரயில்கள் போட்டோம், கட்டடங்கள் கட்டினோம், பல வேலைத் திட்டங்களில் ஈடுபட்டோம், நீங்கள் எமக்கு வாக்களிக்கவில்லை, ஆகவே உங்கள் மாகாண சபையை நடத்த விட மாட்டோம் என்பது போல் சட்டம் எமக்குத் தந்த உரித்துக்களையும் எமக்குத் தராது முடக்கி வருகின்றது மத்திய அரசாங்கம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இவ்வாறு முடக்குவது ஜனநாயகத்திற்குப் புறம்பான ஒரு செயல். அத்துடன் எமக்குத் தரப்பட்ட கார்ப்பெட் தெருக்களும் கட்டமைப்புகளும் வெளிநாடுகளும் வெளிநாட்டு நிறுவனங்களும் எமக்குத் தந்து உதவிய கொடையே அன்றி அரசாங்கம் தானாக எதையும் செலவுசெய்யவில்லை



என்றும் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# தமிழ்குழுக்களின் ஆயுதங்களை

## களைய இந்தியா தவறியது! இதுவே பாரிய அழிவுக்கு காரணமாம்!!

தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்ளை இந்தியா களையத் தவறியமையால் பாரிய அழிவுகள் ஏற்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

1980களின் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சி வழங்கியிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு அமைய, இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையின் ஆயுதக் குழுக்களது ஆயுதங்களை களைவார்கள் என நம்பப்பட்ட போதிலும், அது நடைபெறவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் தொடர்பான கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பயங்கரவாத குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தாம் வாழ்ந்து வந்ததாகவும், இதனால் யுத்த கால அனுபவங்கள் தமக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டால் அது பாரியளவில் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என அவர் சுட்டிக காட்டியுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டால் ஒரே இரவில் வழ்நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு விடக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அவர்களில் பலர் பிரித்தானியா, ஜெர்மனி போன்ற நாடுகளின் குடியுரிமை பெற்றுக் கொண்டு அந்தந்த நாடுகளில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதன் மூலம் மட்டும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி விட முடியாது எனவும், ஏனைய பிரதேச மக்களின் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGLISH

# New law to help families of missing people

By Namini Wijedasa

The Government is drafting legislation to grant a 'certificate of absence' to relatives of the missing who do not want to accept certificates of death for their loved ones, a senior official said yesterday. The certificate of absence—which has never before been issued in Sri Lanka but is used in several other countries with large numbers of missing people—will entitle the holder to the same rights enjoyed by the holder of a certificate of death.

The committee overseeing implementation of the LLRC recommendations has given a proposal to the Ministry of Public Administration which will seek Cabinet approval, committee member and Technology Ministry Secretary, Dhara Wijayatilake said. It will go through the draft stage and will be presented as a bill to Parliament.

Ms. Wijayatilake said the format would be the same as the certificate of death. However, a certificate of absence could not be used in criminal proceedings. The proposal first came from the International Committee of the Red Cross (ICRC) whose database puts the figure of missing at 16,000 from 1990. This includes about 4,500 police and military personnel. Between January 1, 2008 and May 2009, the ICRC collected more than 3000 cases.

"For the time being, the only legal document available to families of missing people to say that a person is not there is a death certificate," ICRC's Deputy Delegation Chief, David Quesne said. "But they do not want to request this kind of document because it would mean that they accept that the person is dead despite not knowing that the person is dead. Psychologically, for them, it means you betray the person if you accept a certificate of death.

"At the same time, these families need a legal document to access many services such as property, pensions and compensation," he explained. "A certificate of absence is a proposed alternative that has the same legal status as the certificate of death. The difference is that, if the person is found, retroaction is possible. The certificate of absence is invalidated."

In Sri Lanka's case, it remains to be seen what the Government will put into the law defining the requirements of the certificate. The ICRC has offered to provide its comments on the draft legislation. Mr. Quesne said the concept of a certificate of absence had been developed in many countries including Nepal, Peru, Azerbaijan and the Balkans.

Meanwhile, the ICRC will in April start a 'Family Needs Assessment' to determine what relatives of missing persons need. It is the first time such a survey is being done and it has been approved by defence authorities, ICRC Spokesperson Sarasi Wijeratne said. "Other surveys have been done on the side of numbers, such as the census," she said. "The Presidential Commission of Inquiry into the Missing is carrying out more of an investigative role. We are dealing with the humanitarian needs of families. These could be economic, legal, administrative, psychological, social, and so on."

The ICRC is partnering with the Ministry of Social Services for the initiative. A sample will be selected out of the database and given a detailed questionnaire now being compiled. The ICRC expects to spend three months in the field collecting information and three months consolidating the report. It will present its recommendations based on the results to President Mahinda Rajapaksa by the end of this year.

"It's invariably the women who are left behind to fend for themselves and their children," Ms. Wijeratne said. "They have to start working, which could be something new to them. It could be a case of them wanting to claim properties, they might want to remarry or they could be dealing with social stigmas. We are trying to find out what the needs of these families are and also what sort of coping mechanisms they have."

courtesy: Sunday times

# President to meet Manmohan



In last-ditch attempt to get India to vote against US resolution

President Mahinda Rajapaksa is to meet Indian Prime Minister, Manmohan Singh, on Tuesday, 4 March in a last-ditch attempt to get India's support for Sri Lanka against the US-sponsored resolution.

The duo are scheduled to meet on the sidelines of the forthcoming Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation (BIMSTEC) summit in Myanmar, just days ahead of the United Nations Human Rights Council (UNHRC) sessions in Geneva.

The third summit of BIMSTEC will get underway in Naypyidaw, the capital of Myanmar.

While India's stance on the proposed US-sponsored resolution on Sri Lanka to the UNHRC is still to be made public, President Rajapaksa on Friday lashed out at the proposed resolution as a 'nuisance' and one which is both 'excessive and forced' while admitting that Sri Lanka was 'uncomfortable' with any resolution against it, even if it is mild.

Addressing a group of Colombo-based foreign correspondents at Temple Trees last Friday (28), Rajapaksa compared Washington's approach to Colombo to 'Cassius Clay using a little boy as a punching bag.'

In response to queries on the possible motive behind the resolution, including attempts to influence a regime change, Rajapaksa said: "There may be a hidden agenda. But, I am not worried, as long as I have the support of my people, which I do."

Speaking on the possibility of international sanctions against the island, the President noted the absence of a mandate for the UNHRC to do so, adding that individual countries were free to clamp sanctions. "Only the Security Council can impose international sanctions, but there are countries with veto power such as Russia and China," he said, reflecting the island's reliance on the two powerful nations for support at the forthcoming UNHRC sessions.

As for India, Sri Lanka's closest neighbour, Rajapaksa did not make any predictions, noting however that India would face an election just one month after the UNHRC sessions, adding that the island was mindful of India's political compulsions.

Asked when he had any ideas as to how India would vote, he said: "I don't know. The Indian leaders have to think of their future and take into account the mood of the electorate. We understand them. Politicians understand each other."

Responding to the expressions of concern with regard to delays in pursuing post-war reconciliation, Rajapaksa assured that his government had done its best while striving to do more. Rajapaksa said: "We have done our best. We have resettled the displaced people, given them electricity, roads and schools. We have demined 94% of the war zone. The accusations against us are grossly unfair."

He also said the Lessons Learnt and Reconciliation Commission (LLRC) report received Cabinet sanction only in July 2012 and the government only had 19 months to address some 280 recommendations.

Rajapaksa also objected to the recently released election manifesto of the All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK), which proposed the holding of a referendum on the formation of a separate, independent Eelam among Sri Lankan Tamils resident in Sri Lanka and abroad, saying: "How could the Tamil Diaspora participate in such an exercise? They are not citizens of Sri Lanka, but various other countries. They can only take part in referenda in those countries." Quashing rumours about a snap presidential poll this year, Rajapaksa also told reporters that there were no plans to hold a snap poll. "The Cabinet has been informed that the next presidential election will be held in 2016, at the end of my six-year term," he said.

Courtesy: Ceylon today

## Korea-Sri Lanka Travel & Tourism Club Launched

The Korea-Sri Lanka Travel & Tourism Club was launched at the Millennium Hilton Hotel in Seoul on 14th February 2014. The club was created to enhance the cultural and economic relationship between Sri Lanka and South Korea. One of its main goals is to promote tourism, a core area of growth for Sri Lanka-Korea relations.



The chief guest of the event, Basil Rajapaksa, Minister of Economic Development met with more than 100 Korean and Sri Lankan members of the club who were present at the launch ceremony. Susil Premajayatha, Minister of Environment and Renewable Energy, also attended the event.

During the event, Minister Rajapaksa further expressed his sincere appreciation to the organizers and members of the tourism club for leading the launch, promoting tourism and cultural relations between Sri Lanka and South Korea and initiating the campaign to increase awareness of Sri Lanka as a popular destination for Korean tourists. Sri Lanka is already being vigorously promoted in Korea's main markets, particularly through a series of promotional campaigns that will be presented throughout the year. This club will provide the additional boost for the tourism campaigns.

During his welcome speech, Ambassador Tissa Wijeratne stated the need to maintain steady channels of communication between Korean agencies and organizations and Sri Lanka; this would aim to promote the travel and trade industry and heighten the relations between the two countries.

Mr. Bhashwara Gunarathna, Chairman of the Sri Lanka Tourism Promotion Bureau, gave a comprehensive presentation with a guiding theme of "Sri Lanka Tourism, an unmatched product" as a way to increase awareness about Sri Lanka's diversity and scenic beauty

Mr. Un –Shik Chung, President of the Korea–Sri Lanka Travel & Tourism Club and Mr. Lee Hoon, Vice President of the Korea World Travel Fair also addressed the gathering.

The members who participated in the event were very enthusiastic about the launch of club and wished the club success and that it brings about longstanding results in the way of bilateral co-operation, booming tourism, and a better understanding of the socio-economic identities and cultures of the two countries.

courtesy-Asian Tribune



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போது புரிகிறதா? தமிழ்நாட்டு ஈழ ஆதரவு வேஷதாரிகளின் சூட்சுமங்கள்?

மட்டுநகரிலிருந்து
எழுகதிரோன்

ஈழத்தமிழர்களின் பெயரில் இந்தியாவில் நடக்கும் வியாபாரம் எல்லை கடந்து செல்கிறது. ஈழதமிழருக்காக குரல்கொடுக்கின்றோம், ஆதரவு தருகின்றோம் அனைத்தையுமே இழக்கின்றோம் என்று தமிழக அரசியல்வாதிகள் கொடுத்துவரும் குரல்களில் உள்ள போலிகளை அம்பலப்படுத்துவதில் இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் யாருமே அக்கறை கொள்வதில்லை.அவர்கள் எப்படி பேசினாலும் அது எமக்கு சாதகமானதே என்கின்ற ஒரு பொத்தாம் பொது சிந்தனை எமது மக்களின் மனதிலும் ஆழமாகவே வேரூன்றி விட்டது. கேட்டால் தமிழ் நாட்டு தமிழர்கள் எமது தொப்புள் கொடி உறவுகள் எமக்கு எதுமேன்றால் அவர்கள் எமக்கு கரம்கொடுப்பார்கள் என்று சப்பை கட்டுகட்டி வரும் இலங்கை எழுத்தாளர்களுக்கு மட்டும் குறைவில்லை. அப்படிஎன்றால் அது என்ன தொப்புள் கொடி உறவு? அப்படி பார்த்தால் இலங்கைத்தமிழர்கள் இந்தியாவில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் என்றும் அவர்கள் இங்கு பூர்வீகம் கொண்டாடுவது பொய்யானது என்றும் சிங்கள இனவாதிகள் சொல்லி வருவது தான் உண்மையோ எனக்கு எதுமே விளங்கவில்லை.

இந்த பூர்வீக ஆய்வுகள் ஒருபுறமிருக்க,



இந்த தொப்புள் கொடி உறவுக்காக வேண்டுமானால் தமிழ் நாட்டில் வாழும் அப்பாவி தமிழ் மக்கள் ஈழத்தமிழர் மீது ஆழ்ந்த அனுதாபம் கொண்டிருக்கலாம்.ஆனால் இந்த அனுதாப அலையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி அரசியல்மற்றும் பொருளியல் இலாபங்களை பெறுவதில் ஜெ.ஜெயலலிதா தொடக்கி ப.நெடுமாறன் வரைக்கும் யாரும் சளைத்து விடவில்லை.தனிநாட்டுக்கான பொது ஜன வாக்கெடுப்பு ஒன்றிக்கு ஐ.நா தலையிட வேண்டுமென கோரி ஜெயலலிதா தீர்மானம் கொண்டு வர போகிறாவாம்.ஈழத்தில் வாழும் எந்த தமிழன் இன்று ஈழம் கேட்பான்? சுமார் 30 ஆண்டுகால யுத்தத்தில் தப்பி பிழைத்து நடைபிணங்களாக வாழும் எமது மக்களை வைத்து இவர்கள் பண்ணும் வியாபாரத்துக்கு அளவு கணக்கே இல்லையா? எமது மக்களில் வாழ்வில் இருக்கின்ற அமைதியையும் மீண்டும் குழப்புகின்ற இந்த முயற்சிகளை ஈழத்து புத்திஜீவிகள் கடுமையாக கண்டிக்க முன்வர வேண்டும்.அடுத்து ஜெயலலிதாவின் கடந்த ஆட்சிகாலத்தில் புலிகளின் பயங்கரவாத செயல்களை தடுத்துநிறுத்த தடா,பொடா என்று கண்ட கண்ட சட்டங்களைஎல்லாம் அமுல்படுத்தியவர் அவர்.இந்த சட்டங்களினால் எல்லாம் புலிகள் கட்டுபடுத்த ப்பட்டார் களோ





**போரிலிருந்து தப்பி பிழைத்த தமிழன் அந்த பனியிலும் குளிரிலும் அடிபட்டு உழைக்கின்ற பணம் ஏன் இந்த பித்தலாட்டகாரர்களை சென்றடைய வேண்டும்? இங்கு கஞ்சிக்கும் கூளுக்கும் வழியின்றி போரில் நிர்க்கதியான ஆயிரக்கணக்கான மக்களுக்கு சென்றடைய வேண்டிய இந்த நிதிகள் ஏன் இப்படி தமிழ் நாட்டு அரசியல் வியாபாரிகளின் வங்கி கணக்குகளை நிரப்பவேண்டும்...........?**

என்னமோ தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் ஈழ அகதிகள் மிகப் பெரும் உபாதைகளுக்கு எ்ளா னர்கள். அப்போது புலிகளை கட்டுப்படுத்தும் வேகத்தில் பொதுமக்கள் பட்ட துன்பங்களை எல்லாம் கண்டுகொள்ள மறுத்தவர் இந்த ஜெயலலிதா. ஆனால் இன்று இந்திய பிரதமரையே கொன்றொழித்த மரணதண்டனை கைதிகளை விடுவிக்க தீர்மானம் கொண்டுவந்துள்ளார்.

இந்த முடிவிற்கு சுமார் பத்து தினங்களுக்கு முன்பு குற்றவாளி நளினி, தன்னை ஒரு மாதம் கண்காணிப்புடன் விடுவிக்குமாறு நீதிமன்றத்தில் கோரியபோது, தமிழக அரசின் சார்பில் அதை எதிர்த்தார்கள். 'இது முடியாது. இவரை வெளியே விட்டால் சட்டம் - ஒழுங்கு பிரச்னை எழும். சிலர் இவரை தங்கள் அரசியல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்த முனைவார்கள். இவருடைய உயிருக்கே கூட ஆபத்து நேரிடலாம்' என்று வாதிடப்பட்டது.

இந்திய மக்களவை தேர்தல் நெருங்க நெருங்க இலங்கைத்தமிழர் மீதான இந்திய அரசியல் வாதிகளின் பாசம் பொத்துக்கொண்டு வருகின்றது என்பதன் அடையாளமே இதுவாகும். ஜெயலிதாவின் பார்ப்பன சார்பு அரசியலை ஆகோ ஓகோ என்று புழுகி எழுதி வரும் துக்ளக் சோ கூட இந்த ராஜீவ் காந்தி கொலைகுற்றவாளிகள் எழுபேரையும் விடுவிக்கும் தமிழக முதலமைச்சரின் முடிவை அரசியல் இலாப நட்ட கணக்கினை அடிப் படையாக கொண்டது என குற்றம் சாட்டியுள்ளார்."ஏழு பேரில் ஒருவரை, ஒரு மாதம் வெளியே விடக் கூட சம்மதிக்காத தமிழக அரசு , பத்தே நாட்களில், ஏழு பேருக்குமே விடுதலையையே தந்துவிட முன்வந்தது ஏன்? அரசியல் தான். அரசியல் என்று ஆன பிறகு, அதில் நியாய, அநியாயம் பார்க்க முடியாது. லாப நஷ்டம்தான் பார்க்க வேண்டும். இதில் லாபமும் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. ராஜீவ் கொலையாளிகளை தமிழகம் மன்னித்து விட்டதாகக் கருத இடமில்லை. நடந்திருப்பது நல்லதற்கல்ல".என அவர் எழுதியுள்ளார்.

மேலும் கோவை குண்டு வெடிப்பு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் உள்ள அபு தாஹிரை விடுதலை செய்ய வேண்டும். 17 வயதில் சிறை சென்ற அவர் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார். இதுபோன்ற பல ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை விடுதலை செய்யவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜவாஹிருல்லா.அப்படி செய்தால் அது ஜெயலலிதாவின் காருண்யத்தின் அடையாளமாக இருக்கும் அதை செய்ய முடியாது. எனவேதான் ஈழத்தமிழரின் உபா தைகளை விற்று பிழைக்கும் கூட்டத்தின் தலைவியே இந்த ஜெயலலிதா என்பது நிருபணமாகிறது.

இதேபோன்று இந்த ராஜீவ் காந்தி கொலைகுற்றவாளிகள் எழுபேரையும் விடுநிக்கும் படி கோரி பல்வேறு போராட்டங்களை பல ஆண்டுகளாக நடாத்தி வரும் நெடுமாறன் போன்றவர்களின் செயல்பாடுகள் எல்லாமே சர்வதேச புலிகளின் நிதி வலைப்பின்னல்களினால் வழி நடத்தப்படுபவை என்கின்ற செய்திகள் இன்று அம்பலமாக தொடங்கியுள்ளன.அது சீமானாக இருக்கலாம் அல்லது திருமாவளவனாக இருக்கலாம் ஏன் கோபால்சமியாக கூட இருக்கலாம்.நெடுமாறன் ஐயாவா என்று என்னோருக்கும் ஒரு சந்தேகம் எழலாம்.ஆம் சாட்சாத் நெடுமாறன் ஐயாவேதான்.

பிருத்தானியாவின் லண்டன் நகரில் அமைந்துள்ள ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயம் என அறியப்பட்ட சிவயோகம் அறக்கட்டளையும் அதன் ஸ்தாபகர் நாகரடணம் சீவரடணமும் கோயில் உண்டியல் பணத்தில் 500 பவுண்கள் தமிழகத்தில் உள்ள தமிழ் தலைவர் பழ நெடுமாறனுக்கு மாதந்தம் அனுப்பப்பி வந்துள்ளனர்.என்னும் இரகசியங்கள் அண்மையில் வெளியாகி யுள்ளன.அப்படியென்றால் இந்த கோயிலுக்கு புகலிடத்தமிழர்கள் வழங்கிவரும் உண்டியல்பணத்தில் மற்றைய தலைவர்களுக்கு எவ்வளவு மாதாந்தம் சென்றடைந்தது என்கின்ற கேள்விகள் உண்டு.அதுமட்டுமல்ல ஐரோப்பாவில் இருக்கின்ற ஏனைய நாடுகளில்,கனடாவில் அவுஸ்ரேலியாவில் என்று புகலிடத் தமிழர்களின் சுமார் நூற்றுக்கும்

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இந்த மக்களுக்கு எனது பணி தேவைப்படும் வரை தொடர்ந்தும் பணியாற்றுவேன்' - முதலமைச்சர் விக்னேஸ்வரன்

எவ்வித மாயைகளுமின்றி செயற்படுகின்ற ஒரு நிர்வாகியாக அரசியல்வாதியாக இவர் உள்ளார். இவர் சமாதானம் மற்றும் நீதி ஆகிய இரண்டினதும் கலவையாக உள்ளார் என்பதை நான் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் மேற்கொண்ட நேர்காணலின் மூலம் அறிந்து கொண்டேன்.

இவ்வாறு கொழும்பை தளமாகக் கொண்ட The Island ஆங்கில ஊடகத்திற்காக நேர்காணல் செய்த NILANTHA ILANGAMUWA தெரிவித்துள்ளார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வட்க்கு மாகாண சபையின் முதலமைச்சர், நீதிபதி கனகசபாபதி விசுவலிங்கம் விக்னேஸ்வரனுடன் அண்மையில் நான் மேற்கொண்ட நேர்காணலானது மிகவும் முக்கியமானதாகும். நீதிபதி விக்னேஸ்வரனை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை யில்லை. இவர் ஒரு சிறிலங்காத் தமிழ் சட்டவாளரும், நீதிபதியும் அரசியல்வாதியும் ஆவார். இவர் ஒரு நீதிவான் நீதிபதியாகவும் மாவட்ட நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும் பணியாற்றினார். 2013ல் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின் பின்னர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபை முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார்.


இவர் தற்போது ஊடகச் செய்திகளைத் தீர்மானிக்கின்ற சக்தியாகவும் விளங்குகிறார். விக்னேஸ்வரன் மாற்றத்தைப் பெற்றுத் தரக்கூடிய ஒருவர் என பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். ஜனநாயகம் என்ற பெயரில் அமைக கப்பட்டுள்ள மிகவும் கறைபடிந்ததும் மோசடி மிக்கதுமான அரசியல் முறைமைக்குள் விக்னேஸ்வரன் தற்போது நுழைந்துள்ளார். எதுஎவ்வாறிருப்பினும், இவர் மிகவும் ஆர்வமுள்ள ஒரு அரசியற் தலைவராகவும், மக்களுக்குப் பயனுள்ள ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சி களை மேற்கொள்கின்ற கருத்தியலைக் கொண்ட ஒருவராகவும் விக்னேஸ்வரன் செயற்படுகிறார்.

இவர் மிகவும் நேர்மையாக தனது கருத்துக்களை வெளிப்படுத்தியமை எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நாடு என்ற வகையில் நாங்கள் இன்று எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளின் மூலவேர் என்ன என்பதை விக்னேஸ்வரன் மிகவும் ஆழமான புரிதலுடன் வெளிப்படுத்தியிருந்தார். எவ்வித மாயைகளுமின்றி செயற்படுகின்ற ஒரு நிர்வாகியாக அரசியல்வாதியாக இவர் உள்ளார். இவர் சமாதானம் மற்றும் நீதி ஆகிய இரண்டினதும் கலவையாக உள்ளார் என்பதை நான் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் மேற் கொண்ட நேர்காணலின் மூலம் அறிந்துகொண்டேன். "இந்த வாழ்க்கையானது உங்களது அறிவாற்றலால் வடிவமைக்கப்பட வேண்டுமே தவிர இது உணர்ச்சி வசப்படுவதன் மூலம் வடிவமைக்கப்படக் கூடாது" என முதலமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

சிறிலங்காவின் அரசியல் என்பது அதிகார வர்க்கத்தால் ஆளப்படும் மிக மோசமான சீரழிவான, நீதியற்ற ஒன்றாகும். சிறிலங்காவில் செயற்படும் புத்திமான்களை வேரோடு அழிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ள இந்நிலையில், விக்னேஸ்வரனின் அரசியல் மூலம் மக்கள் எவ்வளவு காலம் நலன்களைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியாது. தான் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறேன் என விக்னேஸ்வரன் கூறும்போது அது எவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்காது.

வடக்கு மாகாண முதலமைச்சர் திரு.சி.வி. விக்னேஸ்வரனுடன் மேற்கொண்ட நேர்காணலின் முழுவடிவம் இங்கு தரப்படுகின்றது:

**நிலாந்த இளங்கமுவ [நி.இ]:** "நீங்கள் உங்கள் மீசையை சுத்தமாக வைத்திருக்க விரும்பினால் நீங்கள் கஞ்சி குடிக்க முடியாது" என தமிழ்ப் பழமொழியில் கூறப்படுகிறது. உங்களது வாழ்வை மேலும் பயனுள்ளதாக ஆக்குவதற்காக நீங்கள் தற்போது அரசியலில் நுழைந்துள்ளீர்கள். நீதிபதி விக்னேஸ்வரன் ஆகிய நீங்கள் இந்த நாட்டில் மிகவும் மதிக்கப்படுகின்ற நீதிபதிகளில் ஒருவராவார். நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் அரசியலில் நுழைந்தீர்கள். ஆனால் சிறிலங்காவின் 'அரசியல்' என்பது நடைமுறையில் மிகத் துரிதமாக மிகவும் ஆதிக்கம் மிக்கதாக மாறி விட்டதுடன் நாட்டில் ஏற்பட்டுள்ள சமூக சீர்குலை வுகளால் பெரும்பாலானவர்.களின் வாழ்க்கை சிதை வடைந்துள்ளதை என்பதையும் நாம் அறிவோம்.



இந்நிலையில் தாங்கள் அரசியல்வாதியாக மாறியது ஒரு புத்திசாதுரியமான செயல் எனக் கருதுகிறீர்களா?

**சி.வி.விக்னேஸ்வரன் [சி.வி.வி]:** ஏன் நீங்கள் இந்தத் தீர்மானத்தை சாதகமாக நோக்கக் கூடாது? முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி அரசியலுக்குள் நுழைந்ததானது நீங்கள் இங்கு குறிப்பிட்டது போன்று மிகவும் மோசமான நிலை நிறுத்தப்படலாம் எனக் கருதலாமா? என்னைச் சூழ சாதகமான முன்னேற்றங்கள் இடம்பெற்றுவருகின்றன என்பதை நான் கண்டுள்ளேன். அரசியல் நலனுக்காக முன்னர் விமர்சனம் செய்தவர்கள் பின்னர் தமது கருத்துக்களிலிருந்து மாறுவதென்பது மனித இயல்பாகும். நாங்கள் எமக்கெதிரான விமர்சனங்களை நினைத்துக் கவலைப்படாது அனைத்தையும் சீர்னக்கிப் பார்க்க வேண்டும். இருட்டை வெறுத்துக் கொண்டிருப்பதை விட மெழுகுதிரி ஒன்றை ஏற்றிவைப்பது மிகவும் சிறந்தது என பெஞ்சமின் பிராங்கிளின் கூறியிருந்தார்.

நான் அரசியலுக்குள் நுழைந்ததென்பது மிகவும் அறிவார்ந்த தீர்மானமா அல்லது இல்லையா என்பது தொடர்பில் நான் நிச்சயமான கருத்தைக் கூறமுடியவில்லை. நான் குறித்த கட்சியைச் சேர்ந்தவனாக இருக்கமாட்டேன் என்பது நிச்சயமாகும். நான் கடவுளின் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன். கடவுள் தான் என்னை இந்தப் பணியைச் செய்யுமாறு பணித்துள்ளார். நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக இறைவன் என்னை இந்தப் பணியில் அமர்த்தியுள்ளார். அவர் என்னை வேளைக்கு அழைக்க விரும்பினால் அதுவும் நடக்கும். ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? கடவுள் உங்களை ஆசிர்வதிப்பார்.

**நேர்காணல்**
**NILANTHA ILANGAMUWA**
**மொழியாக்கம்: நித்தியபாரதி**

**நி.இ:** நாங்கள் நீண்ட காலமாக விவாதித்து வரும் பிரச்சினை தொடர்பாக நீங்கள் மிகத் தெளிவான கருத்தைக் கொண்டுள்ளீர்கள் என நான் நம்புகிறேன். "நாங்கள் எமது சொந்தத் தாய்நாட்டைக் கேட்கவில்லை. ஒன்றுபட்ட நாட்டுக்குள் எமக்கான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை மட்டுமே நாம் விரும்புகிறோம்" என நீங்கள் அண்மையில் குறிப்பிட்டிருந்தீர்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து முற்றுமுழுதான சுதந்திரத்தைப் பெற்று அதனை அனுபவிப்பதற்கான தாய்நாட்டை உருவாக்குதற்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பிழை என்பதில் நீங்கள் நிச்சயமாக உள்ளீர்களா?

**சி.வி.வி:** பிழையோ சரியோ அது உங்களைப் பொறுத்தது. இந்தப் பிரச்சினையின் கருத்தியல் ராதியான விளக்கம் என்ன என்பதைப் பார்ப்பதற்கு முன்னர் யதார்த்தம் என்ன என்பதை நாங்கள் ஆராயவேண்டும். சிலர் தனிநாடு கோரிப் போராடியதனால் நாம் போருக்கு முன்னர் பெற்றிருந்த மிகக் குறைந்த சுதந்திரத்தைக் கூட இழக்க வேண்டியேற்பட்டது. அவர்கள் இந்தப் பிரச்சி னையை அனைத்துலக அரங்கிற்குக் கொண்டு சென்றனர் என்பது நிச்சயமாகும். சிறிலங்காவின் வடக்கானது தற்போதும் 150,000 வரையான இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதைவிட வடக்கில் வாழ்ந்த அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் சிறிலங்காவை விட்டுப் புலம்பெயர்ந்தனர். தனிநாடு கோரிப் போராடியவர்களால் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றனர். இந் நிலையில், தமிழ்மக்களில் பெரும்பாலானவர்கள் புலம் பெயர்ந்துள்ள நிலையில் யுத்தம் என்பது யாருக்கானது? மிகக் கொடுமையான, இரத்தம் தேய்ந்த போரின் பின்னர் பெறப்படும் தனிநாட்டில் சமாதானத்தை நிலைநாட்டி ஒற்றுமையுடன் செயற்பட முடியும் என நீங்கள் கருதுகிறீர்களா? தனிநாடு பிரிக்கப்படும் போது அந்த நாடு எதிலிருந்து பிரிந்ததோ அதிலிருந்து பாதுகாக் கப்படுவதற்காக பிறிதொரு நாட்டிடம் மண்டியிட வேண்டி வரலாம் என்பதை நீங்கள் நினைக்கவில்லையோ? உங்களது எல்லைகள் தாக்கப்படலாம் என்ற அச்சத்துடன் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்படலாம் என நீங்கள் கருதவில்லையா? முழுச் சுதந்திரம் அல்லது பகுதியளவான சுதந்திரம் என்பதெல்லாம் மனநிலையைப் பொறுத்தது. ஆகவே வாழ்க்கை என்பது உங்களது அறிவாற்றலால் மட்டுமே வடிவமைக்கப்பட வேண்டுமே தவிர உணர்ச்சி களால் வடிவமைக்கப்பட முடியாது என்பதை தயவுசெய்து நினைவு வைத்திருக்க வேண்டும். கலாசார ரீதியாக அனைவரும் ஒன்றுசேர வேண்டும். சாதகமாகவும், மனிதாபிமானமாகவும், யதார்த்தமாகவும் சிந்தியுங்கள். இதன்மூலம் நீங்கள் நாங்கள் எடுத்த தீர்மானம் சரியானது என்பதை அறிவீர்கள்.

**நி.இ:** ஆகவே பல நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்ட, சில பத்தாண்டுகளாகத் தொட ரப்பட்ட குருதி தோய்ந்த பயங்கர யுத்தமானது பயனற்றது என நீங்கள் கருதுகிறீர்களா?

**சி.வி.வி:** தெளிவாகத் தெரிந்த சில விடயங்களைக் கொண்டு எதிர்காலத்தைப் பார்க்க மறுத்தவர்களை நோக்கியே இந்தக் கேள்வி எழுப்பப்பட வேண்டும். கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மாநாடொன்றின் இறுதியில் மிகவும் அறிவார்ந்த ஆலோசனைகளை வழங்கியிருந்தார் என்பதை என்னால் நினைவுபடுத்த முடிகிறது. குறித்த சில கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப் படையில் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதையும் அன்ரன் பாலசிங்கம் விரும்பினார். இந்த நிலையில் நாங்கள் மிகவும் முதிர்ச்சியான அரசியற் தெளிவைக் கொண்டி ருந்தால், குறிப்பாக எமது இராணுவத் தலைமை முதிர்ச் சியான அரசியற் தீர்வை எட்டியிருந்தால் இன்று அதிகளவான மக்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். ஏனென்றால் நாங்கள் நிறைய உயிர்களை இழந்துவிட்டோம். நாங்கள் மேலும் மேலும் யுத்தம் புரிந்து எம்மிடம் உள்ள அனைத்தையும் இழந்துவிட வேண்டும் என நீங்கள் மறைமுகமாக என்னிடம் கூறுகிறீர்கள். 'விட்டில்பூச்சியின்' கதை உங்களுக்குத் தெரியும். இரவில் தெரியும் ஒளியைப் பார்க்கும் விட்டில் பூச்சிகள் அதனை நோக்கிச் சென்று அந்த வெப்பத்தில் எரிந்து சாகின்றன. எங்களது சொந்தங்கள் இறந்துவிட்டனர். இனியும் மேலும் மேலும் இவ்வாறான இழப்புக்கள் ஏற்படக் கூடாது. எமது நியாயமான அரசியல் பலப்பராட்சையானது எங்களது பக்கத்திற்கு உங்களையும் கொண்டு வரலாம். அதாவது எங்கள் பக்கம் என்பது தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம்.

**நி.இ:** மே 2009ல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட யுத்த த்தில் போராளி அமைப்புக்களின் பங்குகள் என்ன என நீங்கள் கருதுகிறீர்கள்?

**சி.வி.வி:** தற்போது இங்கு எவ்வித அமைப்புக்களும் இல்லை.இவை அனைத்தும் ஜனநாயக அரசியலில் இணைந்து விட்டனர்.மிகக் குறைந்தளவானவர்கள் மட டும் அரசாங்கத்தின் ஆதரவுடன் தற்போதும் ஆயுத ங்களுடன் உலாவுகின்றனர்.இது மிகவும் கெட்ட வாய்ப்பாகும். தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பென்பது மிகவும் உரமானதாகவும் தெளிவானதாகவும் உள்ளது. நா ங்கள் எமது உறுதி, தைரியம் மற்றும் வளங்கள் போன்ற வற்றைப் பயன்படுத்துவோம். வன்முறைகளைத் தவிர்ப்போம்.

(7ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வடக்கு மாகாண மக்களின் விசுவாசம் என்னை முதலமைச்சராக ஆக்கியுள்ளது"

(6ம் பக்கத் தொடர்ச்சி)

**நி.இ:** யதார்த்தம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளும் போது அது தனிநாடு கோரிப் போராடக் கூடாது என வழிகாட்டுவதுடன், ஒன்றுபட்ட நாடொன்றிற்குள் நிலையான தீர்வை எட்டுவதற்கு வழிகாட்டும் எனவும் தனித் தமிழ்த் தாய்நாடு என்பது நடைமுறைச் சாத்தியமற்ற தீர்வு என மறைந்த பேராசிரியர் ஸ்ரான்லி ஜே.தம்பையா குறிப்பிட்டிருந்தார். இதனையே தற்போது நீங்களும் கூறுகிறீர்கள். தமிழ் மக்கள் தமக்கிடையில் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்பதே இதற்கான காரணம் என பேராசிரியர் குறிப்பிட்டிருந்தார். தமிழ் மக்களுக்கிடையில் நிலவிய சாதி முறைமைகள் மற்றும் மத நம்பிக்கைகள் போன்றன பிளவுகளை ஏற்படுத்தின. இவை இன்றும் நிலைத்திருக்கின்றன. மத்திய அரசாங்கத்துடன் தொடர்பைப் பேணும் அதேவேளையில், நல்லதொரு தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நீங்களும் இணைந்து மக்களின் மனப்பாங்கை மாற்றமுடியும் என நீங்கள் கருதுகிறீர்களா?

**சி.வி.வி:** மன்னிக்கவும், நான் பேராசிரியர் தம்பையா கூறியதை நான் வாசிக்கவில்லை. இதனால் என்னால் இது தொடர்பாக கருத்துக் கூறமுடியாது. தமிழ் மக்கள் மிகவும் கெட்டிக்காரர்களாக இருப்பதால் இவர்கள் தமக்கிடையில் பிளவுபடுகின்றனர். ஆனால் இந்தக் கெட்டித்தனம் என்பது பெரும்பாலும் சுயநல நோக்கில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றமை ஒரு கெட்டவாய்ப்பாகும். இருப்பினும், ஆயுதங்களுடன் பிரபாகரன் செயற் பட்டமை பிளவுபட்ட தமிழர்களை ஒன்றுபடுத்த உதவியிருக்கலாம். இவர்கள் கெட்டிக்காரர்களாக இருந்த போதிலும், இவர்கள் அச்சப்பட்டனர். நாங்கள் புதிய வழியில் இதனைக் கொண்டு நடாத்த முயற்சிப்போம். இது இரண்டு விதமான அணுகுமுறைகளைக் கொண்டது என நான் நினைக்கிறேன். இவையிரண்டும் ஒரே விதமான பாதையையே சுட்டிநிற்கின்றன. முதலாவது வழிமுறையானது அனுதாபம் மற்றும் மனிதாபிமானத்தைக் கொண்டதாகும். போர் மூலம் மக்கள் இவ்விரு அணுகுமுறைகளையும் உணர்ந்து கொண்டனர். இவற்றை ஏற்றுக்கொள்ளாதவர்கள் புலமைசார் வாதத்தால் கவர்ந்திழுக்கப்படுவர் என நான் நினைக்கிறேன். பொதுமக்களின் அறிவாற்றலையும் நாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான இரட்டை அணுகுமுறை எமது கருத்தியல்களைத் தெளிவுபடுத்தவும், மக்களின் மனப்பாங்குகளையும் மத்திய அரசாங்கத்தை போக்கையும் மாற்றிக் கொள்வதற்கு நடைமுறையில் உதவும் என நான் கருதுகிறேன். வன்முறைப் பாதை தெரிவு செய்யப்பட்ட போது தமிழ் மக்கள் மிகப் பெரிய தியாகங்களைப் புரிந்தனர். இதேபோன்று இவர்கள் வன்முறையற்ற வழிமுறையில் மேற்கொள்ளப்படும் போராட்டத்திற்கும் தமது ஆதரவை வழங்குவதில் ஆர்வமாக உள்ளனர். மத்திய அரசாங்கம் உட்பட எமது அதிகார சக்திகளுடன் மீண்டும் மீண்டும் நாங்கள் எமது கோரிக்கைகளை முன்வைக்க முயற்சிப்போம். முயற்சிப்பதிலும் தோல்வியடைவதிலும் எவ்வித பிழையும் இல்லை.

**நி.இ:** ஜெனிவாவுக்கு பயணம் மேற்கொள்வதில்லை எனவும் உங்களது அரசாங்கத்தைச் சேர்ந்த ஒருவரை ஜெனிவாவுக்கு அனுப்புவதென நீங்கள் தீர்மானித்துள்ளீர்கள். ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் பங்குகொள்வதற்காக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் தற்போது ஜெனிவாவில் தங்கியுள்ளார். நீங்கள் அங்கு செல்வதற்குப் பதிலாக அனந்தியை ஜெனிவா அனுப்பியதன் காரணம் என்ன? மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

**சி.வி.வி:** எமது நாடாளுமன்ற உறுப்பினர்களால் அரசியல் நடாத்தப்படுகின்றது என்பது முதலாவது விடயமாகும். இவர்கள் உண்மையான அரசியல்வாதிகள் ஆவர். நிர்வாகி என்ற வகையில் எனக்கு அதிகமான அல்லது குறைவான அதிகாரங்கள் காணப்படும். ஆகவே நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குகொள்ள முடியும். ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் பங்குகொள்ளக் கூடிய மிகவும் பொருத்தமானவராக அனந்தி உள்ளதால் நாங்கள் அவரைத் தேர்ந்தெடுத்தோம்.

இரண்டாவதாக, ஜெனீவாவில் பங்குகொள்கின்ற நாடுகள் சிறிலங்காவின் மீறல்களை நிரூபிக்கக் கூடிய போதியளவான சாட்சியங்களைக் கொண்டுள்ளன. அனந்தி, கற்றுக் கொண்ட பாடங்களுக்கான மீளிணக்க ஆணைக்குழு, நவி பிள்ளை மற்றும் அண்மையில் இடம்பெற்ற பரனாகம ஆணைக்குழு ஆகியவற்றில் முன்னால் தனது சாட்சியத்தைப் பதிவு செய்திருந்தார். போரின் போது கொல்லப்பட்ட தமது அன்புக்குரிய உறவுகளுக்கான நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்காக கிளிநொச்சிக்கு செல்கின்ற மக்களை சிவில் உடை அணிந்த 'நபர்கள்' தடுப்பதாக அனந்தி எம்மிடம் தெரிவித்திருந்தார். எமது மக்களால் இன்று எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகளை மிகவும் உறுதியாக முன்வைக்கக் கூடிய பொறுப்பு மிக்க பதவியில் அனந்தி உள்ளார் என்பதை நாம் அறிவோம். இந்த வகையில் ஜெனீவாவில் இடம்பெறும் பேரவையின் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக நாங்கள் எமது பிரதிநிதியாக அனந்தியை அனுப்பியுள்ளோம்.

மூன்றாவதாக, போரின் போது அதிகம் இழந்த, இன்றுவரை நலிவடைந்த மக்களாக வாழ்கின்றவர்கள் எமது பெண்களாவர். இந்தப் பெண்களைப் பொறுத்தளவில் தமது எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற ஒருவர் இவர்களுக்குத் தேவை. அந்தவகையில் எமது பெண்களின் நிலைப்பாடுகளை வெளிக்கொண்டு வருவதற்கு மிகவும் பொருத்தமானவராக அனந்தி உள்ளார் என்பதால் நாங்கள் அவரைத் தெரிவுசெய்தோம்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**நி.இ:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் தங்களுக்கு எதிராக சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தங்களுக்கு எதிராக கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கருத்துக்களைத் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நிலையை நீங்கள் எவ்வாறு விளங்கிக் கொள்கிறீர்கள்? இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் எந்த வழியைக் கையாளுகிறீர்கள்?

**சி.வி.வி:** இவ்வாறு எனக்கு எதிராக சதி செய்கின்ற ஒருவரை நான் அண்மையில் அழைத்து நான் அவரது செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புடன் இருப்பதாகத் தெரிவித்தேன். "ஏன் நீங்கள் நீங்களாகவே இவ்வாறான பிரச்சினையை உண்டுபண்ணுகிறீர்கள்?" என நான் அவரிடம் வினவினேன். என்னை எனது பதவியிலிருந்து நீக்குவதற்கு மிகவும் இலகுவான வழி உள்ளதாகவும் நான் அவரிடம் கூறினேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறப்புப் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி முதலமைச்சராக விக்னேஸ்வரன் பதவி வகிக்கக்கூடாது அல்லது நான் ஒரு உறுப்பினராகக் கூட இருக்கக் கூடாது என தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற முடியும் என நான் குறித்த நபரிடம் தெரிவித்தேன். "நீங்கள் இவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்றி சில கணங்களில் நான் கொழும்புக்குத் திரும்பிச் செல்வதற்கான நகர்வுகளை மேற்கொள்வேன். உங்களால் இதனைச் செய்ய முடியாவிட்டால் தயவு செய்து நான் இந்தச் சுமையை சுமப்பதற்கு உதவி செய்ய முயற்சியுங்கள்" என நான் அவரிடம் கூறினேன். நான் ஒரு சட்டவாளர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் தற்போது ஒரு பணியை ஏற்றுக்கொண்டுள்ளேன். கூட்டமைப்பு என்னை இந்தப் பணிக்காக அமர்த்தியுள்ளது. இதைவிட வடக்கு மாகாண மக்களின் விசுவாசம் என்னை முதலமைச்சராக ஆக்கியுள்ளது. இதனால் நான் இந்த மக்களுக்காகச் செயற்படுவேன். அவர்களுக்கு எனது பணி தேவைப்படும் வரை நான் தொடர்ந்தும் பணியாற்றுவேன். அரசியலுக்கு அப்பால் எனது வாழ்வானது மிகவும் நிறைவானதும் அழுத்தம் குறைந்ததும் ஆகும். நான் மக்களுக்குப் பயன் செய்வேன் எனக் கருதி கூட்டமைப்பு என்னை அரசியலுக்கு வருமாறு கோரினார்கள். அவர்கள் நான் தொடர்ந்தும் சேவையாற்றுவதில் பயனில்லை எனக் கருதினால் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வெளியேறுவேன். அரசியல் என்பது எனக்கு தனிப்பட்ட ராதியாக எவ்வித நலனையும் வழங்காது. அதனால் நான் நீங்கள் கூறிய பிரச்சினையைத் தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

**நி.இ:** யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலை ஒன்றைத் திறக்கும் நிகழ்வின் போது இராணுவக் குறைப்பு மற்றும் இராணுவ முகாங்களை அகற்றுதல் போன்றன தொடர்பாக சிறிலங்கா அதிபர் வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் இராணுவமயமாக்கலை மேற்கொள்வதாக கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன. இந்த நிகழ்வின் போது தாங்கள் சிறிலங்கா அதிபருக்கு அருகில் அமர்ந்திருந்ததையும் அதிபரின் கருத்துக்களுக்கு எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை என்பதையும் நான் பார்த்தேன். இந்நிலையில் சிறிலங்கா அதிபர் நேர்மையானவர் என நீங்கள் நம்புகிறீர்களா? வடக்கில் இராணுவமயமாக்கல் எவ்வாறு உள்ளது என்பதை நீங்கள் விளக்குவீர்களா?

**சி.வி.வி:** தயவுசெய்து மற்றவர்கள் மீது முத்திரை குத்தாதீர்கள். எனக்கும் சிறிலங்கா அதிபருக்கும் இடையிலான வேலை ரீதியான உறவை சீர்குலைக்காதீர்கள். முதலாவதாக, மரியாதை மற்றும் கண்ணியத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் முதன்மையானதாகும். எங்களுக்குள் உடன்பாடுகள் எட்டப்படாதிருக்கலாம். ஆனால் நாங்கள் உடன்பாடுகளை எட்ட முடியாதவர்களாக இருக்கவேண்டிய தேவையில்லை. நாங்கள் மனிதநேயம், கலாசாரம் மற்றும் விழிப்புணர்வு போன்றவற்றை கவனத்திற்கொள்ள வேண்டும்.


மேஜர் ஜெனரல் உதய பெரேரா பதவியேற்ற பின்னர் இராணுவ சோதனைச் சாவடிகள் மற்றும் முகாங்கள் போன்றன குறைக்கப்பட்டுள்ளன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் இவர் ஒரு சிறந்த இராணுவ வீரராவார். ஆகவே இவர் இராணுவ ரீதியான எண்ணப்பாங்கையே கொண்டிருக்க முடியும். ஏனெனில் இராணுவ முகாங்கள் அகற்றப்பட்ட இடங்களில் இராணுவத்தினர்கள் ஈருருளிகளில் நிற்பதை நீங்கள் அவதானிக்க முடியும். இதன்மூலம் மக்கள் தொடர்ந்தும் இயல்பு வாழ்வை வாழமுடியாதவர்களாகின்றனர். இவர்கள் அச்சத்தின் மத்தியில் வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது. சிறிலங்கா இராணுவத்தினர் வடக்கிலிருந்து முற்றாக வெளியேற வேண்டும் என தமிழ் மக்கள் நினைக்கின்றனர். அத்துடன் இராணுவத்தினர் முற்றாக அகற்றப்பட்டு சிவில் காவற்துறையினர் மக்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட வேண்டும் என மக்கள் கருதுகின்றனர். துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் போன்ற கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் மிகக் குறைந்தளவில் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. அண்மையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்தரங்கில் என்னால் வழங்கப்பட்ட பிரதம உரைக்கான சிறிலங்கா அதிபரால் விடுக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நான் இங்கு குறிப்பிட வேண்டும். மிகக் குறைந்தளவான இராணுவத்தினரே தற்போது வடக்கு மாகாணத்தில் நிறுத்தப் பட்டுள்ளதாக சிறிலங்கா அதிபர் அறிவித்துள்ளதாகவும் ஆனால் அதிபரின் செயலர் மற்றும் இராணுவ அதிகாரிகளின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் சிறிலங்கா அதிபரால் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையின் ஐந்து மடங்கிற்கும் அதிகமான இராணுவத்தினர்கள் வடக்கில் குவிக்கப்பட்டுள்ளதாக நான் எனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தேன். அதாவது சிறிலங்கா அதிபர் இது தொடர்பில் தவறுதலான தகவலை வழங்கியிருந்தார். இந்த விடயத்தை வெளிப்படையாகவும் நேர்மையாகவும் ஆராய்வதற்கு எம்மை அணுகவேண்டும். இதன்மூலம் ஜனநாயக சுதந்திரங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற முக்கியப்படுத்தப்பட்டு உறுதியான தீர்மானம் எடுக்கப்பட

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது அழுத்தம்: பிரிட்டன் எம்.பி. கண்டனம்!



இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடாது என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் நாஸ்பய் பிரபு தெரிவித்துள்ளார்.
இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை நடாத்த மார்ச் மாதம் வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ள்ளார்.
அவ்வாறான ஓர் பின்னணியில், இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முனைப்புக்களில் பிரிட்டன் தீவிரம் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். கால அவகாசம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதில் ஏன் பிரித்தானியா கூடுதல் முனைப்பு காட்டி வருகின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
செனல் 4 ஊடகத்தின் ஆவணப்படம் போன்றவற்றை எவ்வாறு ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். உறுதியான ஆதாரங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
பிரித்தானிய அரசாங்கம் வாக்குறுதிகளை மீறிச் செயற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மார்ச் மாதம் வரையில் கால அவகாசம் வழங்குவதாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் கடந்த நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது வாக்குறுதி அளித்த போதிலும், தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## ஜெனிவா ஊடாக அதிகாரப் பகிர்வை சில அமைச்சர்கள் கோர முயற்சியாம்



13 ஆவது திருத்தச் சட்டத்தைக் காரணம் காட்டி அதிகாரங்களைக் கோரிய அமைச்சர்கள் சிலர், தற்பொழுது ஜெனிவாவின் ஊடாக அதிகாரப் பகிர்வைக்கோர முயற்சிக்கின்றனர்.
பிரிவினைவாதச் சக்திகளுடன் அதிகாரப் பகிர்வொன்றுக்குச் செல்ல வேண்டிய தேவை இல்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள்சபை எமக்கு எதிராக நேரடியான பொருளாதாரத் தடையை விதிக்க முடியாது.
இதற்காக பாதுகாப்புச்சபையினதும், பொதுச் சபையினதும் அங்கீகாரம் பெறவேண்டும். 13ஆவது திருத்தச் சட்டம் எம் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாகும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
13வது திருத்தச்சட்டம் மற்றும் இலங்கைக்கு எதிரான ஜெனிவா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ச, அமைச்சர் ரோஹித்த அபய குணவர்த்தன, அமைச்சர் பாட்டலி சம்பிக்கரணவக்க ஆகியோர் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு கூறியுள்ளனர்.
அமைச்சரவை என்ற வகையில் கூட்டுப் பொறுப்பை எதிர் கொள்ள வேண்டுமென்றும், தனி நபர்களாக அல்லது குழுக்களாக கருத்துக்களை வெளியிடுவது பொருத்தமில்லை. அமைச்சரவைக் குழுவாகப் பேசுவதே பொருத்தமானது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
பயங்கரவாதிகள் விரும்பியதை தற்பொழுது அடைவதற்கு முயற்சிக்கும் சர்வதேச சக்திகளுக்கு எதிராக மக்கள் திரண்டெழ வேண்டியதே தற்பொழுது நாட்டில் அவசிய விடயமாகும் என்று அவர்கள் கூறினர்.
எமக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்படுமானால் அதனை நடைமுறைப்படுத்த இலங்கையின் அங்கீகாரமும் இருக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## நேர்மையான குழு ஒன்றை ஜெனீவா அனுப்ப சங்கரி கோரிக்கை

நேர்மையான மற்றும் நம்பகமான பிரதிநிதிகள் குழுவொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கோரியுள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனிடம் இந்தக் கோரிக்கையை எழுத்து மூலம் ஆனந்தசங்கரி விடுத்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் மிகவும் முக்கியமான ஓர் சந்தர்ப்ப மாகும் எனவும் அதனை கூட்டமைப்பு சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.
அனுபவம் இல்லாதவர்களை ஜெனிவாவிற்கு அனுப்பி வைக்க வேண்டாம் என அவர் கோரியுள்ளார்.பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் மற்றும் சார்க் மாநாடு போன்ற முக்கிய சந்தர்ப்பங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மனித உரிமை விவகாரம்: அரசியல் கருவியாக பயன்படுத்தப்படுகிறதாம்!

மனித உரிமை விவகாரம் அரசியல் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
மனித உரிமை தொடர்பிலான பிரச்சினைகள் தெரிவு அடிப்படையில் எழுப்பப்படுகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
உலகின் அனைவருக்கும் மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஒரேவிதமான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கைக்கு எதிராக சில தரப்பினர் திட்டமிட்ட வகையில் குற்றச்சாட்டு;க்களை முன்வைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார். புறச் சக்திகளின் தீர்வுத் திட்டங்களை அமுல்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.சர்வதேச சமூகம் அனைத்து நாடுகளையும் ஒரே விதமாக நடாத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.பயங்கரவாதம் இல்லாதொழிக்க ப்பட்டதன் மூலம் இலங்கையில் மட்டுமன்றி பிராந்திய வலயத்திற்கு நன்மைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## 2016ம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் இல்லை!



2016ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தப்போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கொழும்பிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களை ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் கொழும்பில் கடந்த வாரம் சந்தித்துப் பேசினர்.
ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே இந்த வருடம் அல்லது அடுத்த வருடத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்படுகிறது என்று கூறப்படுவது குறித்து ஜனாதிபதியிடம் அங்கு கேள்வி எழுப்பப்பட்டது.
தனது இரண்டாவது பதவிக்காலம் 2016ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னதாக தேர்தல் நடத்தும் எண்ணம் எதுவும் தனக்குக் கிடையாது என்று மஹிந்த ராஜபக்ஷ அப்போது தெரிவித்தார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது அமெரிக்கா தலைமையிலான நாடுகள் கொண்டுவரவுள்ள தீர்மானத்தின் பின்னணியில் அமெரிக்காவுக்கு வேறு சதி நோக்கங்கள் இருக்கின்றன என்றும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.
இலங்கை அரசுக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் முதலில் அவை கட்டாயமாகத் தம்மிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.எப்படியிருந்தாலும் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நெருக்கமான உறவுகள் இந்தத் தீர்மானத்தால் பாதிக்கப்படாது என்றும் அவர் கூறினார்.இதே கருத்தை அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் தெரிவித்தார்.
இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இரு தரப்புத் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என்று அவர் கூறினார். ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்துக்கு எதிராக நட்பு நாடுகளுடன் சேர்ந்து இலங்கை பதில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வராது என்றும் இலங்கை ஜனாதிபதி தெரிவித்தார்

## இலங்கை- அவுஸ்திரேலிய கடற்படை கூட்டுப் பயிற்சி

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய கடற்படையினர் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஹமாஸ் மெல்பர்ன் என்ற அவுஸ்திரேலிய கடற்படைக் கப்பலில் இந்த பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த கப்பல் இலங்கையில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இரு நாடுகளினதும் கடற்படையினர் கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.
சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மற்றும் கடற் கொள்ளை நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நடந்திருப்பது, நல்லதற்கல்ல!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை பெற்ற மூன்று பேர்களின் தண்டனையை, ஆயுள் தண்டனையாக சுப்ரீம் கோர்ட் குறைத்திருக்கிறது; அத்துடன் 'அவர்களுடைய விடுதலையைப் பற்றி உரிய அரசு முடிவு எடுக்கலாம்' என்றும் சுப்ரீம் கோர்ட் கூறியது.

தமிழக அரசு அடுத்த தினமே, 'இந்த மூவர் மற்றும் இதே வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நால்வர், விடுதலை செய்யப்படுவார்கள்' என்று முடிவு எடுத்தது. இந்த மாதிரி முடிவு (ஸி.பி.ஐ. விசாரித்த வழக்கு அது) மத்திய அரசுடன் கலந்து ஆலோசித்த பிறகே எடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

தமிழக அரசு, தனது முடிவை மத்திய அரசுக்குத் தெரிவித்து, 'மூன்று நாட்களில் உங்கள் கருத்து எங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்; இல்லையெனில் இந்த விடுதலைகள் நிறைவேற்றப்படும்' என்று கூறியுள்ளது.

நமக்கு ஒரு சந்தேகம் வரத் தொடங்கியுள்ளது. சுப்ரீம் கோர்ட்டில், ஒரு வழக்கில் தண்டனை உறுதி செய்யப்பட்டு, அதன் பிறகு மறு பரிசீலனை மனுவும் நிராகரிக்கப்பட்டால் அந்த நிலையில் கைதிக்கு இருக்கும் வழி ஜனாதிபதியிடம் (கவர்னரிடம்) கருணை மனு சமர்ப்பிப்பதுதான். 'அந்தக் கருணை மனு மீது முடிவு எடுக்க, நீண்ட தாமதம் நேரிட்டால் கூட, அந்த விஷயத்தில் தலையிட சுப்ரீம் கோர்ட்டிற்கு அதிகாரம் இருக்கிறதா?' என்ற கேள்வியும் நம் மனதில் எழுகிறது.

'சுப்ரீம் கோர்ட்டின் மறு பரிசீலனையும் முடிந்து தண்டனை உறுதியாகிய நிலையில், ஜனாதிபதிக்குக் கருணை மனு சமர்ப்பிக்கப்பட்ட பின், நீதிமன்றத்திற்கு இதில் வேலை கிடையாது ஜனாதிபதியின் முடிவில் உள்நோக்கமோ, கவனக் குறைவோ இருந்தால் தவிர' என்று நாம் நினைக்கிறோம்.

அப்படியிருக்க மத்திய அரசுக்கு மூன்று நாட்கள் நோட்டீஸ் அனுப்பி, இதை முடித்து வைக்க முனைவதும்; 'மத்திய அரசு இதை ஏற்றாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி பதில் வராவிட்டாலும், எங்கள் முடிவு நிறைவேற்றப்படும்' என்று அறிவிப்பதும் எப்படி கலந்தாலோசனை ஆகும்? இது சட்ட ரீதியாகவோ, மற்றபடியோ ஏற்கத்தக்கதாக இல்லை.

இது ஒருபுறமிருக்க, இந்தக் குற்றவாளிகள் புரிந்த அராஜகம் சாதாரணமானது அல்ல. இந்நாட்டின் முன்னாள் பிரதமரைக் கொல்ல மிகவும் வஞ்சனையாகத் திட்டம் தீட்டி, சதி செய்து, அவரையும் அவருடன் எட்டு போலீஸார் மற்றும் ஏழு அப்பாவிகளையும் கொன்று போட்ட கொடூரம் அது. இவர்களுக்கு என்ன கருணை வேண்டிக் கிடக்கிறது?

மற்ற கட்சிகள் கோரிக்கை எழுப்பும் முன்னரே இந்த நடவடிக்கையை எடுத்து, அரசியல் ரீதியாக ஒரு சாமர்த்தியமான முடிவை அரசு எடுத்திருக்கிறது என்று ஒரு அபிப்ராயம் கூறப்படுகிறது. இம்மாதிரியான விஷயத்தில் கூட அரசியல் நோக்கம் புகுவது என்பது, வருத்தத்திற்குரிய விஷயம்.

அப்படி இதில் ஒரு அரசியல் லாபம் இருப்பதாகவும் முடிவு கட்ட முடியாது. இந்த முடிவிற்கு சுமார் பத்து தினங்களுக்கு முன்பு, குற்றவாளி நளினி, தன்னை ஒரு மாதம் பரோலில் விடுவிக்குமாறு நீதிமன்றத்தில் கோரியபோது, தமிழக அரசின் சார்பில் அதை எதிர்த்தார்கள். 'இது முடியாது. இவரை வெளியே விட்டால் சட்டம் - ஒழுங்கு பிரச்னை எழும். சிலர் இவரை தங்கள் அரசியல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்த முனைவார்கள். இவருடைய உயிருக்கே கூட ஆபத்து நேரிடலாம்' என்று வாதிடப்பட்டது.

ஏழு பேரில் ஒருவரை, ஒரு மாதம் வெளியே விடக் கூட சம்மதிக்காத தமிழக அரசு பத்தே நாட்களில், ஏழு பேருக்குமே விடுதலையையே தந்துவிட முன்வந்தது ஏன்? அரசியல் தான். அரசியல் என்று ஆன பிறகு, அதில் நியாய, அநியாயம் பார்க்க முடியாது. லாப நஷ்டம்தான் பார்க்க வேண்டும். இதில் லாபமும் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. ராஜீவ் கொலையாளிகளை தமிழகம் மன்னித்து விட்டதாகக் கருத இடமில்லை. நடந்திருப்பது நல்லதற்கல்ல.

நன்றி: துக்ளக்

# தமிழ் துரோகிகள்!

இரா. சோமசுந்தரம்

ராஜீவ் காந்தி சிலைகளை ஆங்காங்கே உடைப்பதன் வாயிலாக மீண்டும் ஒரு ராஜீவ் படுகொலை தமிழ்நாட்டில் நடத்தப்படுவது எந்த வகையிலும் நியாயமில்லை.

நீதிமன்றம் கருணையுடன் னக்கு தண்டனையை ரத்து செய்து சாதகமான தீர்ப்பு அளித்த பின்னர், விடுதலைக்காக சில வாரங்கள் பொறுத்திருக்கவும் முடியாது என்றால், இவர்களது அராஜகம் எத்தகையது?

இவர்களை விடுவிக்கக் கூடாது என்று மத்திய அரசு நீதிமன்றத்தை அணுகியதால் நீதிமன்றம் இவர்கள் விடுதலையை நிறுத்தி வைத்திருக்கிறது. நாளை, மத்திய அரசின் வாதம் சரியானதே, இவர்களை விடுவிக்கும் உரிமை மத்திய அரசுக்கே உள்ளது என்று நீதிமன்றம் கூறினால், இப்போது ராஜீவ் சிலையை உடைப்பவர்கள் நாளை நீதிமன்றங்களையும் அடித்து நொறுக்குவார்களா?

பேரறிவாளன், சாந்தன், முருகன் மூவருடைய னக்கு தண்டனை ரத்து செய்யப்பட வேண்டும் என்று நீதிமன்றம் அறிவித்தபோது, அதற்கு மத்திய அரசோ, காங்கிரஸ் கட்சியோ எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவார்கள் என்கிற முடிவை தமிழக அரசு அறிவித்தபோதுதான், மத்திய அரசு நீதிமன்றத்தை அணுகுகிறது. நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கும் நிலையில், இத்தகைய வன்முறைகள் எதற்காக? தீர்ப்பு மாறி அமைந்தால் தமிழ்நாடே கதிகலங்கும், ஜாக்கிரதை என்று நீதிபதிகளுக்கு



எச்சரிப்பதற்காகவா?

இந்திரா காந்தியை சீக்கியர் ஒருவர் சுட்டுக் கொன்றார் என்றபோது நாடு முழுவதும், குறிப்பாக தில்லியில் அப்பாவி சீக்கியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். மரம் விழுந்தால் பூமி அதிரத்தான் செய்யும் என்ற சொன்ன ராஜீவ் காந்தி, தமிழகத்தில் வீழ்ந்தார்.

ஆனால் தமிழர்கள் எத்தனை பேர் தாக்கப்பட்டார்கள்? அல்லது கொல்லப்பட்டார்கள்? இந்தியா முழுவதிலும் கணிசமான அளவில் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஏன் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை? இந்திய மனங்களில் இருந்த, இந்தப் படுகொலையை இந்தியத் தமிழர்கள் செய்யவில்லை என்ற தெளிவான புரிதல்தான் அதற்குக் காரணம்.

ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொல்லவில்லை என்று வாதிடும் தமிழீழ ஆதரவு அமைப்புகள், மூவர் விடுதலையை கொண்டாடுவதும், விடுதலையை எதிர்த்து வழக்கு தொடுத்தால் காங்கிரஷஸயும் மத்திய அரசையும் தாக்குவதும் வடஇந்தியாவிலும், வடஇந்திய ஊடகங்களாலும் எவ்வாறு பார்க்கப்படுகின்றன? தமிழர் மீதான கருத்து மாறும்போது பாதிக்கப்படுவது இந்தியாவில் வாழும் தமிழர்களா? இலங்கையில் வாழும் தமிழர்களா? அடைந்தால் தமிழீழம் இல்லையேல் தனித்தமிழ்நாடு



என்பது சிலருடைய விருப்பமாக இருக்கலாம். ஆனால் அது இந்தியாவின் அனைத்துத் தமிழர்களின் விருப்பம் அல்ல.

**மத்திய அரசு அச்சம் தெரிவிப்பதன் காரணம்:**

மூவர் விடுதலை மூலம் இத்தகைய சூழலை வளர விட்டால், தமிழீழம் கிடையாது என்ற நிலையில் தனித் தமிழ்நாடு கோரிக்கையை வைப்பார்கள் என்ற எண்ணம் தான். வட மாநிலத்தவர் மனதில் இத்தகைய பிரிவினை வாதம் தமிழர்களிடம் இருப்பதாக தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தவே இந்த அராஜகங்கள் உதவும்.

ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் மூவர் விடுதலை அறிவிப்பின்போது தமிழ்நாட்டில் எதிர்ப்பு இல்லை. இருந்திருப்பினும் அது மிகக்குறைவே. ஆனால் இப்போது சில அமைப்புகள் நடத்தும் அராஜகம் இந்த விடுதலை குறித்த மறுசிந்தனை தேவை என்பதாக இருக்கிறது.

தூக்கு தண்டனையிலிருந்து ஆயுள்தண்டனையாக குறைப்பு பெற்ற நளினிக்கு மீண்டும் தண்டனைக் குறைப்பு அளித்து விடுதலை செய்ய சட்டத்தில் இடமில்லை என்று பாஜக-வில் இணைந்துள்ள சுப்பிரமண்ய சுவாமி ஏற்கெனவே தொடுத்த வழக்கு இன்னும் முடியவில்லை. இதே வாதத்தை முன்னெடுத்து, பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் விடுதலை தொடர்பான முடிவுக்கு சிலரால் பொது நல வழக்கு தொடுக்கப்படாதா?

மத்தியில் ஆட்சி அமைத்தாலும், தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி என்பது மிகவும் பலவீனமான கட்சி. காங்கிரஸ்காரர்கள் மற்றொரு கட்சி அலுவலகம் முன்பாக போய் தாக்குதல் நடத்தியதாக இதுவரை கேள்விப்பட்டதில்லை.

சத்யமூர்த்தி பவன் வாசலில் ராஜீவ் காந்தி, சோனியா காந்தி உருவ பொம்மைகளை எரிப்பதிலும், செங்கற்களை எறிவதிலும் ஈடுபட்ட இலங்கைத் தமிழர் ஆதரவு அமைப்புகளுக்கு ஒரே கேள்வி:

தமிழ்நாட்டை மாறிமாறி ஆட்சி செய்துவரும் அதிமுக, திமுக தலைமை அலுவலகத்தின் முன்பாக குறைந்தபட்சம் குரல் எழுப்பும் துணிவாவது உங்களுக்கு உண்டா?

அராஜகத்திற்கு தமிழர் பண்பாட்டில் இடமில்லை. தமிழின் பெயரால் தமிழர்கள் பெயரால் அராஜகம் நடத்தும் நபர்கள் தமிழ் நேசங்கள் அல்ல. தமிழர்தம் துரோகிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மக்களின் வாழ்வியலில் பலவந்தமாக மாற்றத்தை ஏற்படுத்துவது மறுக்கப்பட வேண்டும்”

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இந்நிலையில் இவர் நல்லவர் இவர் கெட்டவர் என ஒருவர் மீது முத்திரை குத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஒரு செயற்பாட்டுக்காகச் சண்டை பிடிக்க வேண்டுமே தவிர, நடிகராக இருக்கக் கூடாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**நி.இ:** வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் விமர்சித்திருந்தனர். இது வடக்கு மாகாண சபையின் ஆபத்தான வெளிப்பாடு என சிலர் கருதினர். இது தொடர்பான தங்களது கருத்து, என்ன? இது வடக்கு மாகாண சபையால் எடுக்கப்பட்ட ஆபத்தான தீர்மானம் இல்லை என மக்களை நீங்கள் எவ்வாறு நம்பவைக்க முடியும்?

**சி.வி.வி:** உண்மையை உறுதிப்படுத்துமாறு ஒருவரிடம் கேட்பதில் எவ்வித ஆபத்துமில்லை. உள்நாட்டு விசாரணை அமைப்புக்கள் நம்பகமாகச் செயற்படவில்லை என நாங்கள் கூறுவது ஆபத்தானதா? மிக மோசமான அரசியற் செயற்பாடுகள் இடம்பெறும் சிறிலங்காவில் நீதி எட்டப்பட முடியும் என யாராவது இதயசுத்தியுடன் கூறமுடியுமா?
போரின் இறுதியில் வடக்கில் எமக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் நாம் விழிப்பாக உள்ளோம். இதைவிட சிறிலங்கா அரசு இது தொடர்பாக நன்கறியும். உண்மை வெளிவரக் கூடாது என சிறிலங்கா அரசாங்கம் விரும்புவதே தற்போதுள்ள பிரச்சினையாகும். தன்னால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளை மறைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடுகிறது. குற்றம் செய்பவர்களுக்கு உடந்தையாக இருத்தல் குற்றம் இழைப்பதற்கு சமானமாகும். ஆகவே ஆபத்தான பாதையில் நடப்பது சிறிலங்கா அரசாங்கமே தவிர வடக்கு மாகாண சபை அல்ல.

**நி.இ:** மிக முக்கியமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய வேளையில், 'இனப்படுகொலை' என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், பேச்சாளர் போன்றவர்கள் ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டியிருந்திருக்கும். நீங்கள் தங்களது விவாதத்தின் போது இனப்படுகொலை என்ற பதத்தை பயன்படுத்தியிருப்பீர்கள். ஆனால் தங்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 'இனப்படுகொலைக்குச் சமமானது' என விசாரணையில் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தீர்கள். இந்நிலையில் இவ்வாறான விவாதமானது சில செயற்பாட்டாளர்களுக்கு அதிருப்தியையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருந்தது. 'விக்னேஸ்வரனின் வாதமானது சட்டத்திற்கு மாறானது. இது நீதிச்சேவைக்கு எதிரானது' என சிலர் குறிப்பிட்டிருந்தனர். இந்நிலையில் இது தொடர்பான தங்கள் கருத்துக்கள் என்ன?

**சி.வி.வி:** நீங்கள் கூறுகின்ற விடயத்தை நான் வாசிக்கவில்லை. இதனால் எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன என்பது எனக்குத் தெரியாது. முதலில் எம்மால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இவ்வாறு விமர்சித்தவர்கள் வாசித்தார்களா என்பதைக் கேளுங்கள். போரின் போது மீறல்கள் இடம்பெற்றதாக நான் இத்தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தேன். இந்த மீறல்கள் தொடர்பாக நீதி சார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் போரின் இறுதியில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக தெளிவைக் கொண்டுள்ளோம் எனச் சுட்டிக்காட்டியிருந்தேன். சிறிலங்காத் தீவில் காலாதிகாலமாக வாழ்ந்த மக்கட் கூட்டத்திற்கு எதிராக போரின் இறுதியில் மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாக நாம் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். இதில் எவ்வித சந்தேகமும் எமக்கில்லை. நீதி சார் விசாரணைகளின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் போதே எமது அபிப்பிராயம் சரியா பிழையா என்பது தெரியவரும். இந்த விடயங்கள் நாங்கள் உணர்ச்சி வசப்படாது, நடைமுறை ரீதியாகவும் யதார்த்த ரீதியாகவும் சிந்திக்க வேண்டும் என நான் குறிப்பிட்டிருந்தேன்.

**நி.இ:** அதிகாரப் பரவலாக்கல், அநீதிக்கு எதிராகப் போரிடுதல், மத்திய அரசாங்கத்துடன் உறவைப் பேணுதல் போன்றன அரசியல் யாப்பு மாற்றப்படாவிட்டால் பொய்த்துப் போய்விடும் என நான் கருதுகிறேன். நாட்டில் உள்ள அரசியல் யாப்பின் குறைபாடுகளைக் கதைப்பதற்கு ஏன் பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் தயக்கம் கொள்கின்றனர்? இந்த நாட்டில் நிலவும் நிறைவேற்று அதிகார அதிபர் முறைமைக்கு எதிராக நீங்கள் ஏன் ஒரு தீர்மானத்தை முன்வைக்க முடியாது? நிறைவேற்று அதிகார அதிபர் முறைமையால் தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் போன்றன தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி நாட்டிலுள்ள அனைவருக்கும் மறுக்கப்படும் இந்நிலையில் நிறைவேற்று அதிகார அதிபர் முறைமையை ஒழிப்பதற்கான தீர்மானத்தை நீங்கள் ஏன் முன்வைக்க முடியாது?

**சி.வி.வி:** நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என விளங்கிக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் எங்களில் குறைகாண முடியாது. வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது எம்மால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விளக்கவுரையில் நாங்கள் குறிப்பாக அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டுவர வேண்டிய தேவையுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தோம். சமஸ்டி நிர்வாக அரசியல் யாப்பை நாம் முன்னர் கொண்டிருந்தோம். இது தற்போது ஒற்றை ஆட்சி அரசியல் யாப்பாக மாறியுள்ளது. சமஸ்டி ஆட்சி போன்று, ஒன்றுபட்ட சிறிலங்காவுக்குள் மிகக் கூடிய அரசியல் அதிகாரத்தைப் பகிருகின்ற அரசியல் யாப்பொன்றை நாம் முன்னர் கொண்டிருந்தோம்.
நிறைவேற்று அதிகார முறைமையானது தனியொருவர் நாட்டை ஆளுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் மக்களின் அதிகார ஆட்சி தற்போது தனியொருவரிடம் சேரும் நிலை ஏற்பட்டது. 1973 அரசியல் சீர்திருத்தத்தின் பிரகாரம், தமிழ் மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக மாறவேண்டிய நிலை ஏற்பட்டதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். ஆனால் அப்போது நிறைவேற்று அதிபர் முறைமை காணப்படவில்லை. நிறைவேற்று அதிகார முறைமையைக் கொண்ட 1978 அரசியல் யாப்பு மற்றும் மிக மோசமான 18வது திருத்தச் சட்டம் போன்றவற்றை நான் எனது பல உரைகளில் குற்றம் சுமத்தியுள்ளேன். இந்த முறைமைகளால் தனியொருவர் நாட்டின் அதிகாரத்தைத் தக்க வைத்திருக்க முடியும்.

**நி.இ:** தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மற்றும் முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து புலிகளால் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் ஒற்றுமையாக வாழ்ந்தனர். ஏன் இவர்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர் எனவும் தமது காணிகளுக்குத் திரும்பிச் செல்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை என்பது தொடர்பில் சிங்கள அரசியல்வாதிகள் மிகவும் பலமான விவாதத்தைக் கொண்டுள்ளனர். வடக்கில் சிங்களக் குடியேற்றம் இடம்பெறுவதாக தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இது தொடர்பில் தங்கள் விளக்கம் என்ன?

**சி.வி.வி:** சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்த்தப்பட்ட அனைத்து மக்களும் மீளக் குடியேற்றப்பட வேண்டும். எவ்வாறெனினும், உண்மையில் இடம் பெயர்ந்தவர்கள் மீளக்குடியேற்றப்பட வேண்டும். மக்களின் வாழ்வியலில் பலவந்தமாக மாற்றத்தை ஏற்படுத்துவது மறுக்கப்பட வேண்டும். தமது சொந்த இடங்களுக்கு வருபவர்கள் தமது அடையாளங்களை சரியாக உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் சிறிலங்கா அரசாங்கத்தால் அல்லது குறித்த சிங்கள தேசியவாத அமைப்புக்களால் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் இடம்பெறுவதால் மக்கள் தமது சொந்த இடங்களை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.
முஸ்லீம் மக்களைப் பொறுத்தளவில் அவர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான நிறுவகம் ஒன்றை நாம் விரைவில் அமைக்கவுள்ளோம். வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என நாங்கள் ஏற்கனவே எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். மக்களும் இது தொடர்பில் தமது ஆணையை வழங்கியுள்ளனர். இதை நிறைவேற்றுவது எமது கடமையாகும். தனது சொந்த அரசியல் நலனுக்காக வெளியாட்களை வடக்கில் குடியேற்ற முயற்சிக்கும் முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் நாம் கவனம் செலுத்தவில்லை எனக் கருதக்கூடாது.
சிங்களவர்கள் வடக்கில் எங்கே வசித்தார்கள் என்பதை எமது மூத்தவர்கள் இலகுவாக இனங்காட்டுவார்கள். இவர்கள் மிகக் குறைந்தளவு எண்ணிக்கையினரே. எடுத்துககாட்டாக, நான் மிகச் சிறியவனாக இருந்தபோது மானிப்பாயில் எமக்குப் பாண் விற்றவர் மாத்தறையைச் சேர்ந்த அப்புகாமி ஆவார். இவர் மிகவும் அன்பானவர். இவர் யாழ்ப்பாண மக்களைப் போல மிகவும் அழகாக தமிழ் பேசுவார். இதேபோன்று அளவெட்டியைச் சேர்ந்த மூத்த சட்டவாளர் இளையதம்பி தமக்கு பாண் விற்ற சிங்களவர் தொடர்பாகக் கூறினார். இவரும் நீண்டகாலம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததாகவும் தமிழை நன்றாகப் பேசுவார் எனவும் இளையதம்பி என்னிடம் தெரிவித்திருந்தார். 1983ல், சிறிலங்கா இராணுவத்தினர் இவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதாகக் கூறி குறித்த சிங்களவரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றினர். இவ்வாறானவர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் போது இவர்கள் மீண்டும் குடியேற்றப்பட முடியும்.
சிறிலங்காவின் தெற்கிலும் தமிழ் மக்கள் வாழ்ந்தனர் என்பதை மறக்கக் கூடாது. மாத்தறையில் ஆலய பரிபாலன சபை ஒன்று உள்ளது. இதன் தலைவராக ஓய்வுபெற்ற ஆணையாளர் திரு.கிருஸ்ணதாசன் செயற்பட்டார். ஆனால் தற்போது இந்தப் பரிபாலனசபை செயற்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இதன் சொத்துக்கள் மீளவும் கையளிக்கப்பட்டதா? இதற்காக இவர்கள் முயற்சி செய்தும் தோல்வியடைந்து விட்டது. 1950 களில் 60 களின் ஆரம்பத்தில் திஸமகரகமவில் அரைவாசி நெல்வயல்களை திரு.பசுபதி மற்றும் அவரது சகோதரர் வைத்திருந்தனர். ஆனால் இவை அனைத்தும் கலவரத்தின் போது கூலிப்படைகளால் அழிக்கப்பட்டன. இதனால் இங்கு மீளச் செல்வதற்கான சந்தர்ப்பம் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. தென் சிறிலங்காவிலிருந்து தமிழர்கள் திட்டமிட்ட ரீதியில் வெளியேற்றப்பட்டனர். தற்போது வடக்கில் சிங்களவர்கள் குடியே ற்றப்படுவதற்கான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கிறது. நாங்கள் இதற்கான தீர்வைச் சட்டத்தின் மூலம் அடைய விரும்புகிறோம்.

**நி.இ:** கொழும்பில் பெரும்பாலான தமிழ் மக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ்கின்றனர். இந்த சாதகமான நிலையை ஏன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்த முடியாது?

**சி.வி.வி:** 'ஏனையவர்கள்' கொழும்பில் பெரும்பாலான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இதனால் அங்கே அமைதி நிலவுகிறது. கொழும்பில் தற்போதும் கூட ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள முடிகிறது. கொழும்பில் வாழ்பவர்கள் ஆங்கிலத்தில், சிங்களத்தில் அல்லது தமிழில் உரையாட முடியும். இவற்றைவிட, கொழும்பில் தூதரகங்கள் காணப்படுகின்றன. இதனால் இங்கு அனைத்துலக சமூகத்தின் கண்காணிப்பு உள்ளது. இதனால் கொழும்பில் அமைதி நிலவ வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.
வடக்கில் சமாதானத்துடன் வாழ்வதற்கு நீங்கள் எம்மை அனுமதித்தால் நாங்கள் எவ்வித சந்தேகமுமின்றி அமைதியுடன் வாழ்வோம். வடக்கு மாகாணத்தின் வரலாற்றை மீளஎழுத முயற்சித்து, இங்கு சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டால் எவ்வாறு அமைதி நிலவ முடியும்? மக்களின் நாளாந்த வாழ்வில் சிறிலங்கா இராணுவத்தின் தலையீடுகள் அதிகம் காணப்படுகின்றன. ஏற்கனவே வடக்கு மாகாண சபை சுயாதீனமாக இயங்குவதற்குத் தேவையான அதிகாரங்கள் மறுக்கப்பட்ட நிலையில், நாங்கள் எவ்வாறு இங்கு சமாதானமாக வாழமுடியும்?
வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழ்ந்த மக்கள் பல்வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்டனர். 1983 என்பது மிகவும் மோசமான ஆண்டாகும். பிந்துனுவெள மற்றும் ஏனைய இடங்களில் பல்வேறு படுகொலைகள் இடம்பெற்றன. மதத் தீவிரவாதம் தற்போது தெற்கு மற்றும் மேற்கில் தலைவிரித்தாடுகிறது. முஸ்லீம்கள், கத்தோலிக்கர்கள் மற்றும் இந்துக்கள் குறிவைக்கப்பட்டு தாக்கப்படுகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில்

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேனிலவுக்கு உகந்த நாடுகள்: இரண்டாமிடத்தில் இலங்கை!

வெளிநாட்டவர்கள் தங்களது தேனிலவைக் கொண்டாடுவதற்காகச் செல்ல சிறந்த நாடுகள் பட்டியலிலும் திருமணம் செய்துகொள்வதற்கான சிறந்த நாடுகள் பட்டியலிலும் இலங்கை இரண்டாம் இட த்தைப் பெற்றுள்ளது.சர்வதேச சுற்றுலாத்துறை நிறுவனமான சுவிட்ஸர்லாந்தின் குஓனி நிறுவனம் கடந்த 8 வருடங்களாக நடத்திய ஆய்வின் பயனாகவே இலங்கைக்கு இந்த இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.

திருமண வைபவங்கள் நடத்துதல் மற்றும் தேனிலவுக்கான ஹோட்டல்களைப் பதிவு செய்தல் போன்ற விடயங்களைக் கருத்திற் கொண்டே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது என்று மேற்படி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம், திருமணம் செய்துகொள்ள சிறந்த 10 நாடுகளாக மொராஷியஸ், இலங்கை, அமெரிக்கா, சென்.லூசியா, அன்டிகுவா, தாய்லாந்து, பாபடோஸ், மெக்ஸிகோ, ஜமய்க்கா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியன தெரிவாகியுள்ளன.

தேனிலவு செல்வதற்கு சிறந்த நாடுகள் பட்டியலில் மாலைதீவுகள், இலங்கை, ஐக்கிய அரபு இராச்சியம், தாய்லாந்து, மொராஷியஸ், அமெரிக்கா, இந்தோனேஷியா, மலேசியா, சென்.லூசியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை ..... (1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்ட பேச்சுவார்த்தை நடைபெறும் வரையில், தமது மீனவர்கள் கடலுக்கு செல்லமாட்டார்கள் என, இந்திய மீனவர் சங்கங்களின் தலைவர்கள் தெரிவித்திருந்தனர்.

எனினும், இலங்கையின் கடல் எல்லையை மீறி பிரவேசித்த 91 இந்திய மீனவர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்ப ட்டுள்ளனர்.

இதேவேளை, இந்திய கடல் எல்லையை மீறிய 25 இலங்கை மீனவர்களும், 5 படகுகளும் இந்திய பாதுகாப்பிரிவின் பொறுப்பிலுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

### இலங்கையில் ..... (12ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பிலான சகல விதமான உதவிகளையும் அரசாங்கம் நிராகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பிலான பொறிமுறைமை ஒன்றை உருவாக்க தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு வழங்கிய பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு ரீதியில் நம்பகமான விசாரணகைள் நடத்தப்படாவிட்டால் சர்வதேச விசாரணைகளை வலியுறுத்த வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளார்.

### இப்போது.... (5ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமான கோவில்கள் உண்டல்லவா? அங்கிருந்தெல்லாம் எத்தனை ஆயிரம் டொலர்களும் ஈரோக்களும் இந்த தமிழ் நாட்டு ஈழ ஆதரவாளர்களுக்கு மாதாந்தம் சென்றிருக்கும்? போரிலிருந்து தப்பி பிழைத்த தமிழன் அந்த பனியிலும் குளிரிலும் அடிபட்டு உழைக்கின்ற பணம் ஏன் இந்த பித்தலாட்டகாரர்களை சென்றடைய வேண்டும்? இங்கு கஞ்சிக்கும் கூளுக்கும் வழியின்றி போரில் நிர்க்கதியான ஆயிரக்கணக்கான மக்க ளுக்கு சென்றடைய வேண்டிய இந்த நிதிகள் ஏன் இப்படி தமிழ் நாட்டு அரசியல் வியாபாரிகளின் வங்கி கணக்குகளை நிரப்பவேண்டும்? என்று இனிமேலாவது நாம் குரலெழுப்ப வேண்டாமா? இலங்கை தமிழர்களே?

### இலங்கை ..... (1ம் பக்கத் தொடர்ச்சி)

ங்கம் அடிப்படை விடயங்களை இதுவரையில் பூர்த்தி செய்யவில்லை என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரி உஸ்ரா ஸெயா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் ஜனநாயக உரிமைகள் நிலை நாட்டப்பட்டுள்ளதனை உறுதி செய்யும் நோக்கிலேயே அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ்-கொழும்பு ..... (12ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அதிவேக நெடுஞ்சாலையின் னரம் 300 கிலோ மீற்றர் எனத் தெரிவிக்கப்படுகிறது. நான்கு கட்டங்களாக நெடுஞ்சாலையின் நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

முதல் கட்டமாக என்டாரமுல்ல தொடக்கம் அம்பேபுஸ்ஸ வரையில் பாதை அமைக்கப்பட உள்ளது, 52.3 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட முதல் கட்டத்திற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### இரணைமடு........ (1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுவர் என்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நண்பகல் வரையான அமர்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் தெரியவந்திருக்கிறது.

இதேவேளை, இரணைமடு விவகாரம் தொடர்பில் ஆலோசிப்பதற்காக வருமாறு கிளிநொச்சி விவசாயிகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டமைப்பினர் முடிவினை எடுத்துவிட்டு தம்மிடம் அது தொடர்பில் தெரிவித்தாகவும் கடும் விசனம் வெளியிட்டுள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கூட்டமைப்பினரின் குறித்த முடிவினை தாம் ஏற்கப்போவதில்லை என்றும் இரணைமடு நீரினை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லும் திட்டத்தினை தடுத்து நிறுத்துவதற்காக தாம் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கப் போவதாக தெரிவித்திருக்கின்றனர்.

### இந்திய .. (1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்க உள்ளனர்.

மார்ச் மாதம் 4ம் திகதி மியன்மாரில் பிம்ஸ்டெக் மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் இரு தலைவர்களும் சந்திக்க உள்ளதாக இந்திய வெளிவிவகார் செயலாளர் சுஜாதா சிங் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கப்படுமா இல்லையா என்பது குறித்து சிங் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.தீர்மானம் தொடர்பிலான ஆவணத்தை ஆராய்ந்ததன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### வடக்கின்..... (12ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட உள்ளத் தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே சிசன், நியூயோர்க்கில் கடமையாற்றி வரும் ஐக்கிய நாடுக்ள அமைப்பு உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் இராணுவத்தை எவ்வாறு நிலைநிறுத்துவது என்பது அரசாங்கத்தின் தீர்மானமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த களத்தில் உயிரைப் பணயம் வைத்து போராடிய படைவீரர்களை எந்தவொரு புத்திசானரியமான அரசாங்கமும் வீட்டுக்கு அனுப்பி வைக்குமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இராணுவத்தின் எண்ணிக்கை குறைப்பானது பாரியளவில் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை உருவாக்கக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

படைவீரர்களை வீட்டுக்கு அனுப்பி அதன் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படக் கூடிய வகையிலான எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எந்த சந்தர்ப்பத்திலும் எடுக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்கப் பணிகளில் படைவீரர்கள் சிறந்த முறையில் பங்களிப்பினை வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதனை தடுக்கும் நோக்கில் வடக்கில் படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### மக்களின்........ (10ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு சமாதானமான அமைதியான வாழ்வை நிலைநாட்ட முடியும்?

**நி.இ:** மிக மோசமான அனுபவங்களைக் கொண்ட நாட்டில் நாம் வாழ்கிறோம். பல நூறாண்டுகளாக, நாங்கள் சுதந்திரத்திற்காகப் போராடினோம். ஆனால் நாங்கள் இதனை அடைந்தோமா? நாங்கள் இந்த உலகில் மிக மோசமாக நடாத்தப்படும் மக்களாக மாறினோம். எமது தலைவர்கள் எம்மைப் பாதுகாப்பார்கள் என நாம் கருதினோம். ஆனால் இதற்குப் பதிலாக எமது சுதந்திரத்தை அவர்கள் பறித்தார்கள். இதனால் எமக்கு பாதுகாப்போ அன்றி விடுதலையோ கிடைக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளால் கலாநிதி ராஜினி திறனாகம படுகொலை செய்ததிலிருந்து முதலாவது பெண் பிரதம நீதியரசர் சிறிலங்கா அதிபரால் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை வரை நாங்கள் அண்மையில் பல்வேறு சோகமான, மோசமான மற்றும் விசர்த்தனமான அனுபவங்களைப் பெற்றுள்ளோம். மிகவும் அடிப்படைவாதக் கேள்விக்குப் பதிலளிக்கப்பட வேண்டும். நாங்கள் எவ்வாறு ஒருவரையொருவர் மதிக்கத் தொடங்கப் போகிறோம்? எமக்கு உண்மையில் என்ன தேவை என்பதை நாங்கள் எவ்வாறு கண்டுபிடிக்கப் போகிறோம்?

**சி.வி.வி:** நீங்கள் இத்தகைய கேள்வியை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரிடம் வினவக்கூடாது. நீங்கள் இதனைப் பழைய விக்னேஸ்வரனிடம் வினவவேண்டும். இதற்கான பதில் அவரிடமிருந்து வருமே ஒழிய முதலமைச்சர் விக்னேஸ்வரனிடமிருந்து கிடைக்காது.

உங்களது கேள்விக்கு எமது மதங்கள் அனைத்தும் பதிலளித்துள்ளன. எமது மத நெறிமுறைகளில் என்ன கூறப்பட்டுள்ளன என்பதை நாங்கள் மறந்துவிட்டோம். பௌத்தமதத்தை எடுத்துக் கொண்டால், விரதமிருத்தல் என்பது எமது நோய்களைத் தீர்ப்பதற்காகும். கெட்டவாய்ப்பாக, எமது அரசியல்வாதிகள் அதிகாரங்களைக் கொண்டுள்ளனர். இவர்கள் தமக்கான அதிகாரங்களை தமது நலன்களுக்காகப் பயன்படுத்துகின்றனர். தமக்காக வாக்களித்த மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேறறுவதற்காகவே தாம் தெரிவு செய்யப்பட்டுள்ளோம் என்பதை அரசியல்வாதிகள் மறந்துவிட்டனர். அரசாங்கம் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதை நிறுத்த வேண்டும். சமாதான நடவடிக்கையின் போது பெருமளவான தென் சிறிலங்கர்கள் தமது ஆதரவை வழங்கினர். ஆகவே மக்களை வழிநடாத்த வேண்டியது அரசாங்கமே. அரசியல் உறுதியையும் அதிகார ஈடுபாட்டுடனும் அரசியல்வாதிகள் செயற்பட்டால் மக்கள் அவர்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**நி.இ:** கலந்துரையாடுவதற்கு இன்னமும் அதிகமான விடயங்கள் உள்ளபோதிலும் அதற்கான நேரம் போதாது. ஆனால் இந்த முதலாவது நேர்காணலில் நாங்கள் மிக முக்கிய விடயங்களைக் கலந்துரையாடியுள்ளோம் என நான் நம்புகிறேன். நான் மீண்டும் உங்களுடன் நேர்காணலை மேற்கொள்வேன் என நம்புகிறேன். இதற்கும் மேலாக நீங்கள் ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

**சி.வி.வி:** ஆம். சில அரசியல்வாதிகள் மற்றும் ஊடகங்களால் சிங்கள மக்கள் தமிழ் மக்கள் தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள். இந்த மக்கள் உண்மைகளைக் கண்டறியவேண்டும் என நான் விரும்புகிறேன். பல்வேறு அமைப்புக்களால் சித்தரிக்கப்படுவது போன்ற நிலைமை மிக மோசமானதல்ல என்பதை நீங்கள் தற்போதைய நேர்காணல் மூலம் உணர்ந்திருப்பீர்கள். நாங்கள் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருத்தமான தீர்வை எட்டுவதற்கான வாய்ப்பை நாம் பயன்படுத்தியிருக்கலாம் என நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். தமிழ் பேசும் மக்கள் மிகத் தெளிவான ஆணையை வழங்கியுள்ளனர். இவர்கள் வன்முறைகளை விரும்பவில்லை. இவர்கள் ஒன்றுபட்ட சிறிலங்காவுக்குள் அரசியற் தீர்வொன்று எட்டப்படுவதற்கான ஆதரவை வழங்குகின்றனர். தமிழ் பேசும் மக்கள் உங்களைப் போன்றே இந்த நாட்டை மிகவும் நேசிக்கிறார்கள். ஆனால் இவர்கள் மனிதர்களின் பாதுகாப்பு, அடிப்படைவாத சுதந்திரம் தமது பாரம்பரிய இடங்களில் தமது விவகாரங்களைத் தாமே நிர்வகிப்பதற்கான உரிமை போன்றவற்றையே கோரிநிற்கின்றனர்.

நீங்கள் எல்லோரும் சமாதானம் மற்றும் செழுமையுடன் வாழ்வதற்கு கடவுள் வழிகாட்டுவார். உங்களுக்கு நன்றி.

நன்றி.புதினப்பலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
ELUKATHIR

## யாழ்.- கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம் - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்தஅதிவேக நெடுஞ்சாலை நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளா நாயகம் டபிள்யூ.ஏ.எஸ். வீரசிங்க தெரிவித்துள்ளார். (11ம் பக்கம் பார்க்க)

# ஐநா தீர்மானங்கள்: அஞ்சப்போவதில்லை-ஜனாதிபதி




ஐக்கிய நாடுகள் அமைப்பின் தீர்மானங்களைக் கண்டு அஞ்சப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.
எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்தை நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.
மொரட்டுவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
கியூபா போன்ற நாடுகள் இவ்வாறான பல தீர்மானங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவித் துள்ளார்.
இலங்கைக்கு எதிராக இரண்டு தீர்மானங்களே இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.
ஜெனீவா பிரச்சினை தொடர்ந்தும் ஓர் தலைவலியாக அமைந்துள்ளது எனவும் அதைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
கியூபாவிற்கு எதிராக இவ்வாறான அறுபது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டள்ளதாகத் தெரிவத்துள்ளார்.
கியூபாவிற்கு விஜயம் செய்திருந்த போது இவ்வாறான தீர்மானங்களை பெரிதுபடுத்த வேண்டாம் என கியூப ஜனாதிபதி ராவல் கஸ்ட்ரோ ஆலோசனை வழங்கியதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் சில நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.
30 ஆண்டுகளாக போரை எதிர்கொண்ட இலங்கைக்கு இவ்வாறான அழுத்தங்களை வெற்றிகொள்வது சவாலாக அமையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் சமாதானத்திற்கு பிரிட்டன் பூரண ஆதரவாம்!

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பூரண ஆதரவளிக்கப்படும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.
நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முழு அளவில் ஆதரவளிக்கப்படும் என பிரித்தானியா வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வாயர் தெரிவித துள்ளார்.
நிலக்கண்ணி வெடி அகற்றுதல், சிறுவர் போராளிகளை சமூகத்துடன் மீள இணைத்தல், யுத்த வலய பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள பணிகள் வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளையினால் வெளியிடப்பட்ட அறிக்கையை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
2013ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது செய்யப்பட்ட பரிந்துரைகள் எதனையும் இலங்கை அரசாங்கம் இதுவரையில் கவனத்திற் கொள்ளாமை வருத்தமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.
(11ம் பக்கம் பார்க்க)

# வடக்கின் படை எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாது!

## பாதுகாப்பு செயலர் திட்டவட்டம்!!



எந்த காரணத்திற்காகவும் வடக்கு படையினரின் எண்ணிக்கை குறைக் கப்படமாட்டாது என பாது காப்புச் செயலாளா கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
சர்வதேச சமூகம் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்த போதிலும், வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் குறைக்கப்பட மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலக்கு வைத்து சில நாடுகள் இலங்கைக்கு எதிராக ராஜதந்திர ரீதியான முன்நகர்வுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.
இறுதிக் கட்ட யுத்தத்தின் போதும் மேற்குலக நாடுகள் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்திருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கைக்கான அமெரிக்கத் தூ துவரும், பிரித்தானிய உயர்ஸ்தானிகரும் இலங்கைக்கு எதிராக பிரச்சாரம் செய்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.
இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன், இந்தியாவிற்கு விஜயம் செய்து, ஐக்கிய
(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org